# பாட்டாளி சிந்தனை

Volume 28 No. 5

சோசலிஸ்ட் யூனிட்டி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

January 2018

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்

# லெனின் அவர்களுக்கு செவ்வணக்கம்



*22 ஏப்ரல் 1870 – 21 ஜனவரி 1924*

“ . . . இந்நெருக்கடியை பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள் வெறும் ‘கொந்தளிப்பு’ தான் எனச் சித்தரிக்கின்றனர். . . . மற்றொருபுறம், புரட்சியாளர்கள் சில நேரங்களில் அந்த நெருக்கடியானது முற்றிலுமாக நம்பிக்கையற்ற நிலை என நிரூபித்திட முயல்கின்றனர். அது ஒரு தவறாகும். முற்றிலும் நம்பிக்கையற்ற ஓர் சூழ்நிலை என எதுவுமில்லை. பூர்ஷ்வா வர்க்கம் என்ன செய்வதென்று அறியாமல் மதியிழந்து, ஆணவம் பிடித்த கொள்ளைக்காரன் போல் நடந்துகொள்கின்றது. அது மேலும் மேலும் மடமையாகக் குற்றம் புரிந்துகொண்டு, சூழ்நிலையை மேலும் கடுமையாக்கி, அதன் இறுதி நாளை விரைவுபடுத்திக்கொண்டிருக்கின்றது. இவையனைத்தும் உண்மையே.

ஆனால், சுரண்டப்படுபவர்களில் சிறுபான்மையினரான சிலரை ஒருவகையான அற்ப சலுகைகளைக்காட்டிச் சுலபமாக ஏமாற்றிடவும், அல்லது ஒடுக்கப்படும் மற்றும் சுரண்டப்படும் மக்கட் பிரிவினர் சிலரின் சில போராட்டங்களையும் எழுச்சிகளையும் அடக்கிடுவதற்குமான வாய்ப்பு முற்றிலுமாக இல்லை என நிரூபித்திட முடியாது. ஒரு சூழ்நிலை ‘முற்றிலுமாக’ நம்பிக்கையற்று காணப்படுகிறது என முன்னதாகவே நிரூபித்திட முயல்வது சுத்த பண்டிதத்தனமாகும், மேலும் அது கோட்பாடுகளையும் அரசியல் சொற்றொடர்களையும் கொண்ட ஏமாற்று வித்தையாகும் ... உலகம் முழுவதிலுமுள்ள பூர்ஷ்வா அமைப்புமுறை மிக ஆழமான புரட்சிகர நெருக் கடியைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றது. ஒரு வெற்றிகரமான புரட்சியை நடத்தி முடித்திட இந்நெருக்கடியைப் பயன்படுத்துவதற்கு, புரட்சிகரக் கட்சிகள் யாவும் அவைகளின் நடைமுறைச் செயல்பாடுகள் மூலம் தாங்கள் போதிய அளவில் அறிவுகூர்மையுடனும் அமைப்புரீதியுடனும் இருக்கின்றோம் என்பதை, போதிய அளவில் சுரண்டப்படும் மக்களுடன் தொடர்பில் இருக்கின்றோம் என்பதை, போதிய அளவில் தீர்மானகரத்துடனும் திறனுடனும் இருக்கின்றோம் என்பதை இப்போது நிரூபித்தாக வேண்டும்.

*(1920ஆம் ஆண்டு, 19 ஜுலையிலிருந்து 7 ஆகஸ்டு வரையில் நடந்த 2வது கம்யூனிஸ்ட் சர்வதேசிய மாநாட்டில், வெளியிடப்பட்ட“ சர்வதேசிய சூழ்நிலை மற்றும் கம்யூனிஸ்ட் சர்வதேசியத்தின் அடிப்படைக் கடமைகள் பற்றிய அறிக்கை”)*

# மக்கள் மீது ஈவிரக்கமற்ற பொருளாதாரத் தாக்குதலைத் தொடுத்தும் பிரிவினையைத் தூண்டியும் வரும் ஆர்எஸ்எஸ்–பாஜக

“நரகத்திற்கான பாதை நல்லெண்ணத்துடன் வகுக்கப்பட்டிருக்கிறது” என்கின்ற கூற்று ஒன்று உண்டு. பாஜக ஆட்சியிலான முதலாளித்துவ இந்தியாவில் வாழ்கின்ற மக்கள் அந்த நீதிமொழி எப்படித் தங்களுக்குப் பொருத்தமாக அமைந்திருக்கிறது என்பதை அனுபவித்து வருகின்றனர். கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் முழுமையான அழிவின் விளிம்பிற்குக் கொண்டுசெல்லுமளவிற்கு அவர்கள் மீதான பொருளாதாரத் தாக்குதலின் அளவு மிகக்கடுமையாக உள்ளது.

பாஜகவின் பிரதமர் அவர்கள் தன்னைத்தான் புகழ்ந்துகொள்வதில் ஆனந்தப்பட்டுக்கொண்டும், தனது வாதங்களை நியாயப்படுத்துவதற்கான உண்மைகளை வைப்பதற்குக் கவலைப்படாமலும், மாபெரும் சாதனைகளை நிகழ்த்திவிட்டதாக காட்டிக்கொள்வதை வழக்கமாகக் கொண்டும், தான் ஒரு புதிய இந்தியாவை நிர்மாணிக்கப்போவதாகவும் தன்னை விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

மேலும், அவரும் அவரது கட்சியும் தமது வாய்ச்சவடால்களை மக்கள் நம்பிட ஏதுவாக அரசுக்கட்டுப் பாட்டிலிருக்கும் சக்திவாய்ந்த பிரச்சார இயந்திர மான தொலைக்காட்சிச் சேனலையும், கூடவே ஏகபோகங்கள் வைத்திருக்கும் கார்ப்பொரேட் ஊடகத்தையும் 24 மணி நேரமும் முடுக்கிவிட்டு அடுக்கடுக்கான வாக்குறுதிகளை அள்ளிவீசி காலம் தள்ளிக்கொண்டிருகிறார். அவரது நெருங்கிய அமைச்சரவைக் கூட்டாளிகள் இந்தப் பொய்யான வாக்குறுதிகளை வானளாவப் புகழ்ந்துகொண்டும் அவை மகிழ்ச்சியான, வளமான வாழ்க்கையைக் கொண்டுவருவதற்காக நன்கு யோசித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எனக் கூறியும் வந்தனர். இது வெறும் ஏமாற்று வேலை என்பது குறுகிய காலத்திலேயே நிரூபிக்கப்பட்டுவிட்டது. சமீபத்தில், பிரதமரும் அவருக்கு அடிபணிந்து துதிபாடுபவர்களும் மீண்டும் மீண்டும் தொடுக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனமான பொருளாதார மற்றும் நிதிக்கொள்கைகளால் தத்தளித்துக்கொண்டிருக்கும் மக்களிடம் 2022ஆம் ஆண்டுக்குள் ஏழை மக்களுக்கு நிரந்தரக் குடியிருப்பும், மின்சாரமும், முறையான மருத்துவமும் சுகாதார வசதியும், நல்ல கல்வியும் கிடைக்கக் கூடிய ‘நல்ல நாட்களை’க் காண்பார்கள் என மக்களை நம்ப வைத்திட மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

விவசாயிகள் வருமானம் இருமடங்காக உயரும் எனவும் கூறிவருகின்றனர். வளர்ந்து வளம் பெற்றிட இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் போதுமான வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும், நாடு போலி மதச்சார்பின்மை தாக்கத்திலிருந்தும் பயங்கரவாதத்திலிருந்தும் விடுபட்டிருக்கும் என்றும் கூறிவருகின்றனர். பிரதமர் அவர்கள், தான் அதற்காக “பெரிய” மற்றும் “கடினமான” முடிவுகளை எடுக்க பயப்படவில்லை என்றும் 2019ஆம் ஆண்டிற்குள் 99 திட்டங்களை நிறைவேற்றிட உறுதி பூண்டிருப்பதாகவும் கூறுகின்றார். அதற்காக மக்கள் அதிக தியாகங்கள் புரிய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். அமைச்சரவையிலுள்ள அவரது சகாக்களும் அவரது கட்சியும்கூட அவர் அள்ளிவீசும் பொய்யுரைகளுக்கு பின்பாட்டு பாடிக்கொண்டும் அவர் நாட்டின் வளர்ச்சிக்கான சிற்பியென்றும், வெளிநாடுகளில் இந்தியாவின் கௌரவத்தை அவர் உயர்த்திக்கொண்டிருக்கிறார் என்றும் அவரைப் பாராட்டித்தள்ளுகின்றனர். தங்களின் வாதத்தை பலப்படுத்துவதற்காக, பெரும்பான்மை இந்தியர்கள் அவரை மிகச்சிறந்த பிரதமர் எனக் குறிப்பிடும் ‘ஆய்வு’ அறிக்கைகளை கோடிட்டுக் காட்டி வருகின்றனர்.

ஆட்சியதிகாரத்தில் நீடித்திட, பிரதமரும் அவரது அரசாங்கமும், கட்சியும், உடனிருப்பவர்களும் முன்னணி ஏகபோகங்கள், தொழில் குடும்பங்கள், சேம்பர் ஆஃப் காமர்ஸ், உலக வங்கி, சர்வதேச நிதியமைப்பு போன்ற உலகளாவிய ஏகாதிபத்திய முதலாளித்துவ நிறுவனங்களுக்காகப் பாடுபட்டுக்கொண்டிருப்பதால்தான், அவைகளின் மிக உயர்ந்த பாராட்டு விருதுகளை இவர் பெற்றிருக்கிறார் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

### பணமதிப்பு நீக்கம், ஜிஎஸ்டி எனும் இருமுனைத் தாக்குதல்

‘கடும் சோதனைக்குள்ளாயிருக்கும் கோடான கோடி மக்களைக் காப்பாற்றிட’ என்று கூறப்பட்டு பட்டியலிடப்பட்ட 99 திட்டங்களில் உரக்கப் பேசப்படுவது பணமதிப்பு நீக்கம், சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) என்பவையாகும். ‘பிரம்மாண்டமான திட்டங்கள்’ என்கின்ற இவ்விரண்டும் நடைமுறைக்கு வருகையில் பொருளாதாரத்தை அப்பழுக்கிலிருந்து சுத்திகரிக்கும் என்றும், கருப்புப்பணத்தை வெளிக்கொண்டுவந்துவிடும் என்றும், ஊழல் மற்றும் முறைகேடுகளிலிருந்து இவ்வமைப்பை விடுவித்துவிடும் என்றும்,

தொடர்ச்சி 2ம் பக்கம்

# பணமதிப்பு நீக்கமும் ஜிஎஸ்டியும் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதாகும்

1ம் பக்கத் தொடர்ச்சி

அமைப்பிலுள்ள அனைத்து ஓட்டைகளையும் அடைத்துவிடும் என்றும், வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவந்துவிடும் என்றும், வரி அமைப்பு முறையை எளிமையாக்கிவிடும் என்றும், மக்களின் வருமானத்தை அதிகரித்து விலைவாசியைக் குறைத்து எதிர்பாரா ஆதாயத்தை அள்ளித்தெளிக்கும் என்றும் வாதிடப்பட்டது. ஆனால், ஒன்றன்பின் ஒன்றாக இவ்விரண்டு 'துல்லியத் தாக்குதல்களையும்' பொருளாதாரத்தில் தொடுத்த சில மாதங்களிலேயே, தாங்கள் முட்டாள்களாக்கப்பட்டதோடன்றி, இதில் பலிகடாவாகவும் ஆக்கப்பட்டோம் என்பதை மக்கள் கண்டார்கள். ஒரே மூச்சில் பெருமளவில் பணப் புழக்கம் அகற்றப்பட்டதால், கீழ்மட்ட பொருளாதார மாக இருக்கின்ற, 80 சதவீத நாட்டுமக்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கின்ற விவசாயம், சிறு மற்றும் நடுத்தர வியாபாரம், சிறு சில்லரை விற்பனை நிலையங்கள், பரந்துபட்ட அளவிலிருக்கும் அமைப்பு சாரா தொழிற் பிரிவுகள் போன்ற இவ்வனைத் திலும் நாம் ஒவ்வொருவரும் அறிந்தவாறு ரொக்கப்பணமே பரிவர்த்தனைக்கான ஊடகமாக இருப்பதால் அவையாவும் முடங்கிப்போயின. ஒரேயடியாகப் பணம் இல்லாமற்போனதால் இத்தகைய துறைகள் யாவும் ஸ்தம்பித்து, நிராதரவற்ற கோடானகோடி அடித்தட்டு இந்திய மக்களின் வாழ்வாதாரம் ஆபத்திற்குள்ளானது.

### பணமதிப்பு நீக்கம், ஜிஎஸ்டியால் ஏற்பட்டிருக்கும் விவசாயிகளின் சீரழிந்த நிலைமை

இந்திய விவசாயிகளின் நிலைமை குறித்து பரிச்சயப்பட்ட எவரும் அவர்களது வாழ்க்கை என்பது அதிகரித்துக்கொண்டேயிருக்கும் அவலத் தினாலும் கடுமையான வறுமையினாலும் சூழப்பட்டி ருக்கிறது என்பதை அறிவர். பூர்ஷ்வா அரசாங் கத்தின் விவசாயிகளுக்கெதிரான நாசகர விவசாயக் கொள்கைகள் யாவும் அவர்களை ஈவிரக்கமின்றி நிலத்திலிருந்து வெளியேற்றுவதை தீவிரப்படுத்தியும், விவசாய இடுபொருட்களின் விலையை தொடர்ச் சியாக விண்ணை முட்டுமளவிற்குக் கொண்டு சென்றும், பணப் பயிர்களை ஒப்பந்த சாகுபடி செய்வதின் மூலம் பன்னாட்டு நிறுவனங்கள் விவசாயத் துறையில் ஊடுருவதற்கு வழிவகை செய்தும், அத்தகைய நிறுவனங்கள் இடுபொருள் உற்பத்தியில் மேலாதிக்கம் செய்வதற்கு வழிவகை செய்தும், அத்துடன் டீசல் மற்றும் மின்சாரத்தின் விலை உயர்வதற்கு வழிவகை செய்துமிருக்கிறது. அதற்கும் மேலாக, பயிர்கள் கொள்முதலைக் கட்டுப் படுத்தும் நேர்மையற்ற இடைத்தரகர்கள், ஊழல் அரசாங்க அலுவலர்கள், உயர் மட்ட நிர்வாகிகள், ஆளும் கட்சித் தலைவர்கள், கிராமப்புற இடைத் தரகர்கள் ஆகியோருக்கிடையிலான ஊழல் மலிந்த உறவு என்பது விவசாயிகளின் உற்பத்திப் பொருளுக்கு குறைந்தபட்ச விலையை கிடைக்க விடாமல் செய்வதுடன், அரசாங்கம் அறிவித்திருக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை என்றழைக்கப்படுவது ஏட்டளவில் மட்டுமே இருக்குமாறு செய்துவிடுகிறது.

கடுமையான துன்பத்தில் ஆழ்ந்திருந்த விவசாயிகள் பணமதிப்பு நீக்கத் தாக்குதலால் மேலும் துன்பத்திற்கு ஆளானார்கள். கடன் தேவையைப் பொருத்தமட்டில் விவசாயம் நடைபெறும் மும்முரமான பருவம் என அழைக்கப்படும் கோடை காலப்பயிர் அறுவடை காலத்தில், அதாவது குளிர்காலப்பயிர் விதை தூவும் பருவத்தின் துவக்கத்தில், ஒன்றன் பின் ஒன்றாக வந்த திருவிழாக்கள் மற்றும் திருமண வைபவங்கள் நடைபெறக்கூடிய காலத்தில் இந்தப் பணமதிப்பு நீக்கமானது அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் பிரதம மந்திரி அவர்கள் இன்னும் ஐந்து ஆண்டு களில் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப் பாக்கிடுவேன் எனப் பீடிகை போட்டு, உண்மையில் அதிகரிக்கும் எண்ணிக்கையில் ஓட்டாண்டிகளாக ஆக்கப்பட்ட விவசாயிகளுக்கு கசப்பான அறு வடையைத்தான் பரிசாகத் தந்தார். அரசு கொள்முதல் இயந்திரமானது கைவசம் ரொக்கம் ஏதுமில்லை என மேற்கோள்காட்டி **பயிர்களை** வாங்கிட மறுத்தது. விவசாயிகள் தங்கள் பயிர்களை விற்க முடியாமல் போனது மட்டுமில்லாமல், கைவசமிருந்த சொற்பபணமும் செல்லாது என அறிவிக்கப் பட்டதால் உயிர்வாழ்வதற்கு அடிப்படைத் தேவையாக இருக்கின்றவைகளைக்கூட வாங்க முடியாமல் போனார்கள். ரொக்கப்பணத் தட்டுப்பாடானது, காய்கறிகளின் கொள்முதல் விலை சரிவடைவதற்கும், கோதுமை பயிரிடுவது தாமதப்பட்டுப்போவதற்கும், குளிர்காலப்பயிர் இடுபொருட்களின் பற்றாக்குறைக்கும், விவசாயத் தொழிலாளர்களின் கூலி கடுமையாகச் சரிவதற்கும் கூட இட்டுச்சென்றது. பணமதிப்பு நீக்கத்தின் தாக்கம் தொடர்ந்து இருந்து வந்ததால், ரொக்கப்பணத் தட்டுப்பாடானது கோடைகாலப்பயிர் பருவத்திலும் கூட தொடர்ந்து இருந்துகொண்டிருந்தது. மிகவும் கவலையளிக்கும் விதத்தில், கோடிக்கணக்கான ஏழைகளின் பட்டினியில் உயிர்வாழ்ந்துகொண்டு ஆதாயம் தேடும் பிரிவினர், பல்வேறு முறைகேடுகள் செய்து விவசாயிகளின் விளைபொருட்களை அடிமாட்டு விலைக்கு கட்டாயப்படுத்தி வாங்கி பின்னர் அதனை கள்ளச்சந்தையில் உலவ விட்டு, குறுகிய காலத்தில் பணம் சம்பாதித்திட இச்சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். நேர்மையற்ற அதிகாரிகளின் உடந்தையுடன் பின்வாசல் வழியாக புத்தம் புதிய ரூபாய் நோட்டுக்களைப் பெற்றதுடன் தாங்கள் கூறும் விலைக்கு விற்கத் தயாரானால் கைமேல் காசு தருகிறோம் என ஆசைகாட்டி விவசாயிகளை ஏமாற்றிட அப்பணத்தை வேண்டும் போது பயன்படுத்தினர். விவசாய இடுபொருட்களின் விலையை கடுமையாக உயர்த்தி அவற்றை வாங்கிட கடுமையான நிபந்தனைகளுடன் திருப்பிச் செலுத்தக்கூடிய 'கடனை' வழங்கினர். நாட்டின் பல பகுதிகளில் விவசாயிகளுக்கு முறையான கடன் வழங்கிடும் முக்கியத்துவம் வாய்ந்த கூட்டுறவு வங்கிகளுக்கு பணமதிப்பு நீக்கம் செய்யப்பட்ட நோட்டுக்களை வங்கியில் செலுத்தவும், புதிய நோட்டுக்களை மாற்றிக்கொள்ளவும் தடை விதிக்கப்பட்டன.

இவ்வாறாக, பிரதானமாக ரொக்கப்பரிவர்த் தனையைச் சார்ந்திருக்கின்ற விற்பனை, போக்கு வரத்து, மொத்த வியாபார மையங்களுக்கு தயாரா யிருக்கும் விளைபொருட்களை விற்றல் மற்றும் வினியோகம் செய்தலில் விற்பனையில் சரிவு ஏற்பட்டதால் விவசாயிகளுக்கு வழுங்கல் சங்கிலி யில் தடைகளும் தடங்கல்களும் ஏற்பட்டன. விரைவில் அழுகிப்போகின்ற பொருட்கள் விரயமா வது அதிகரித்தது. கைவசம் ரொக்கம் இருப்பதற்குப் பதிலாக வியாபாரக் கடன் என்பதைக்குறிக்கும் குறைந்த அளவிலான வருமானம் மற்றும் அதை வங்கியில் செலுத்தச் செல்கைகையில் ஏற்பட்ட கட்டுப்பாடு அத்துறையைப் பாதித்தது. இத்தகைய ஒட்டுமொத்த காரணிகளின் விளைவுகள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு மீண்டுவர முடியாத வகையில் விவசாயிகளையும் விவசாயப் பொருளாதாரத்தையும் சின்னாபின்னமாக்கியது.

ஆனால், பிரதம மந்திரி அவர்கள் "அரசாங்கம் எடுத்த முடிவுகள் நம் நாட்டின் பொருளாதார முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் உழைப்பாளர்களுக்கும் பல்வேறு ஆதாயங்களைத் தந்துள்ளது, ஊழல் மற்றும் கருப்புப் பணத்தால் ஊரக இந்தியாவின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் இனிமேலும் தடுத்திட முடியாது" என வெட்கமின்றி தொடர்ந்து கூறிக்கொண்டே யிருக்கின்றார்.

ஜிஎஸ்டி தடுமாற்றத்துடன் அறிமுகமான நாள் முதற்கொண்டே விவசாயமும் பேரழிவிற்குள்ளானது. விவசாயிகள் மேலும் பேரழிற்கு உள்ளானார்கள். அத்தியாவசிய விவசாய இடுபொருட்களான விதை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் விலை 200 முதல் 300 சதவீதம் உயர்ந்தது. அரசாங்கமானது, சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தில் இருக்கும் 'விவசாயம் புரிபவர்' என்பதில் ஒரு புதிய விளக்கத்தை சேர்த்துக்கொண்டதன் மூலம் தேர்வு செய்யப்பட்ட சில விவசாயம் சார்ந்த சரக்குகளை தேசிய அளவிலான வரிவிதிப்பு வலைக்குள் கொண்டுவர வழிவகை செய்திருக்கின்றது. அதற்கேற்ப, மலர்ச்செடி வளர்ப்பு, தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, பயிர் வளர்ப்பு, புல் அல்லது தோட்ட உற்பத்திப்பொருட்கள் மற்றும் புல் அறுத்தல், பால் பண்ணை, கால்நடை வளர்த்தல், கால்நடைகள் இனப்பெருக்கம், மரம் மற்றும் புல் வெட்டுதல், பழம் சேகரித்தல், மனிதனால் உருவாக்கப்படும் காடுகளை வளர்த்தல், நாற்றுகள் அல்லது செடிகள் வளர்த்தல் ஆகிய அனைத்தும் விவசாயம் என்ற வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டு அவை ஜிஎஸ்டி வரி விதிப்புக்கு உள்ளானது.

அத்தகைய செயல்பாடுகள் மூலம் எப்படியோ வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் ஏழை விவசாயிகள்தான் அரசாங்கத்தின் வெளிப்படை யான தாக்குதல் இலக்காகும். இப்போது விவசாயிகள் அவர்களின் பல்வேறு இடுபொருட்களை ஜிஎஸ்டியுடன் கூடிய விலையைக் கொடுத்துத்தான் வாங்கியாக வேண்டும். விவசாயி தன் நிலத்தை குத்தகைக்கு விட வேண்டுமாயின் அவர் 18சதவீதம் ஜிஎஸ்டி வரி கட்டியாக வேண்டும். அவர் அதற்காக புதிய வரி விதிப்பு முறையின்படி, பதிவு செய்து கொண்டு வருடத்திற்கு 37 கணக்கு வழக்குகளை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது.

இன்றும்கூட, சிதறடிக்கப்பட்ட விவசாயப் பொருளாதாரத்தில் வரிமேல் வரிகட்டுவதனா லான விளைவை (Cascading Effect) சில்லரை வணிகச் சந்தையில் காண முடிகின்றது. நோட்டுக்கள் தடை திடீரென அறிவிக்கப்பட்டதால் விவசாயப் பொருட்களை வாங்கி சந்தையில் விற்பதற்காக சாதாரண விற்பனையாளர்கள், சிறு வினியோகஸ் தர்கள் கையில் வைத்திருந்த ரொக்கப்பணம் பறிபோனது. ஆக, எங்கு பார்த்தாலும் பெருங் குழப்பமும் நிச்சயமற்ற தன்மையும் காணப்பட்டது. ஒரே மூச்சில், அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், சர்க்கரை, பச்சைக் காய்கறிகள் மற்றும் பிற அத்தியா வசியப் பொருட்களின் விலை என்றுமில்லாத வாறு உயர்ந்து சாமானிய மக்களுக்கு ஒரு கெட்ட கனவாக ஆனது. அதன் பின்னர், அரசாங்கமும் நிர்வாகமும் வேடிக்கை பார்ப்பவர்களாக இருப்பதால் ஊழல் வணிகர்கள், கள்ளச்சந்தைக் காரர்கள், பதுக்கல்காரர்கள் மற்றும் செயற்கையாக விலையை ஏற்றுபவர்கள் அனைவரும் ஏதாவது காரணங்களை வைத்து விலைகளை உயர்த்திட சூழ்நிலை முழுவதுமாகத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

ஜிஎஸ்டி வரி விகிதம் குறித்த தெளிவின்மையும் அதிகரித்துவரும் போக்குவரத்துச் செலவும் ஒவ்வொரு வகையிலும் விலையை உயர்த்தி சாமானிய மக்களை கசக்கிப் பிழிந்திட இத்தகைய நேர்மையற்ற செல்வாக்குமிக்கவர்களுக்கு வசதியாக அமைந்துவிட்டது. புள்ளி விபரங்களை தந்திரமாக மாற்றியும் கணக்கிடும் முறையை மாற்றியமைத்த பின்னரும்கூட உணவுப்பொருட்களின் பணவீக்கம் உள்ளிட்ட இந்தியாவின் சில்லரை வர்த்தகப் பண வீக்கம் தொடர்ந்து அதிகரித்து வேறு வழியில்லா மல் மக்கள் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவது குறைந்து மக்களின் ஆரோக்கியம் மேலும் பாதிக்கப்பட்டுள் ளது என அரசாங்கமே இப்போது ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

### பணமதிப்பு நீக்கம் மற்றும் ஜிஎஸ்டியால் உழைக்கும் வர்க்கத்தினரின், சிறு வியாபாரிகளின் அதிகரித்துவரும் துயரங்கள்

தொழில்துறை மீதான இதன் தாக்கம், குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மீதான தாக்கம், மிகக்கடுமையாக உள்ளது. இத் தொழில்துறையில் 90சதவீத பரிவர்த்தனையின் ரொக்கக் கணக்கு மார்ச் '2017இல் வீழ்ச்சியுற்றது. பணமதிப்பு நீக்கம் அறிமுகமாகிய பின்னர், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் 60சதவீத வேலை பறிபோனதுடன் 55சதவீத வருமான இழப்பும் ஏற்பட்டது. ஆக, பணச்சுற்று என்கின்ற அதாவது சரக்குகளை விற்று அதன் மூலம் கிடைத்த பணத்தின் மூலம் புதிதாக கச்சாப்பொருட்கள் மற்றும் பிற உதிரிப் பாகங்கள் வாங்குதல் கடுமையாக பாதிப்படைந்து, உண்மையில் ஸ்தம்பித்த நிலை ஏற்பட்டது. அழிந்துபோகும் நிலைமையில் இருப்பதால், சிறு வியாபாரம் செய்பவர்கள் மத்தியில் முணுமுணுப்பு அதிகரித்த வண்ணம் இருக்கிறது. புலம்பெயர்ந்த தொழிலாளர் களும் தற்காலிகத் தொழிலாளர்களும் ஒட்டு மொத்தமாக வேலையிழந்துள்ளனர். விவசாயம் சாராத உழைப்பாளர்களில் 93சதவீதத்தினருக்கு வேலைதரும் அமைப்புசாரத் துறையில் கூலி வழங்க ரொக்கமில்லாததால், பெரும்பான்மையான தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய் விட்டது. பணமதிப்பு நீக்கம் அறிமுகமாகிய பின்பு, நகரப்பகுதிகளில் தினக்கூலி வாங்குபவர்களில் 65சதவீதத்தினர் வேலையிழந்து அவர்களின் சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிச் சென்று விட்டனர். கார்ப்பொரேட் ஊடகங்களும் 15 லட்சம் பேர் வேலையிழந்ததை வேறு வழியின்றி ஒப்புக் கொண்டது. ஆனால், அது இன்னும் அதிகமென அதிகாரபூர்வமற்ற தகவல்கள் கூறுகின்றன.

தொடர்ச்சி 6ம் பக்கம்

## 'பத்மாவதி' திரைப்படம் குறித்த சர்ச்சை

# படைமுறைப்படுத்தப்பட்ட பாசிச சிந்தனையை நாட்டின் மீது திணிக்கும் பாஜக–ஆர்எஸ்எஸ்ஸின் அபாயகரமான முயற்சி

பத்மாவதி என்ற ஹிந்தித் திரைப்படம் பெரும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறது. மத்திய திரைப்படத் தணிக்கை வாரியத்தால் சான்றிதழும் தரப்படாமல் விட்டது. அப்படம் ஒரு வாழ்க்கை வரலாற்றுச் சித்திரமா அல்லது புனைக்கதையா என்பதும் தெளிவுபடுத்தப்படவில்லை. ஆனாலும் அப்படத்தின் மூலக்கதையானது சில வரலாற்று சம்பவங்களை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது என அறியப்படுகிறது. சிலருக்கு மட்டும் இப்படம் தனியாக திரையிட்டுக்காண்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து ரஜபுத்தர பெருமையின் பாதுகாவலர்கள் என் தங்களைத்தாங்களே அழைத்துக்கொண்ட கார்னி சேனா என்ற குழுவானது ஒரு பெரிய பிரச்சினையைக் கிளப்பிவிட்டது.

முன்னாள் ரஜ்புத்னாவின் சிட்டூரைச் சேர்ந்த பெருமைக்குரிய ரஜபுத்தர ராணி பத்மாவதியின் வாழ்க்கை வரலாறுதான் அப்படம் எனவும் மோசமான முறையில் வரலாறு திரித்துக்கூறப்பட்டு ரஜபுத்திர மக்களின் உணர்வுகளை புண்படுத்தி விட்டது எனக் கூறினர். ஆகவே இப்படம் தடை செய்யப்படவேண்டும் எனக்கோரினர். அப்படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த தீபிகா படுகோனே வின் மூக்கை அறுக்கப்போவதாகவும் மிரட்டினர்.

உடனடியாக, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், ஹரியானா, உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களின் பாஜக முதலமைச்சர்கள் அவர்களின் கூற்றை அங்கீகரித்தும் தங்கள் மாநிலங்களில் அப்படத்திற்கு தடையும் விதித்தனர். இவ்விஷயத்தில் தலையிடவும் அப்படத்தின் வெளியீட்டிற்கு தடைவிதிக்குமாறும் மத்திய அரசை அந்த பாஜக முதலமைச்சர்கள் வலியுறுத்தினர். பஞ்சாபின் காங்கிரஸ் முதலமைச்சரும் இந்த பாஜக முதலமைச்சர்களுடன் சேர்ந்துகொண்டு துருவமயப் படுத்தப்பட்டுள்ள (Polarised) இச்சமுதாயத்தில் ஆர்எஸ்எஸ்–பாஜக செய்வதைப்போலவே தேர்தல் ஆதாயங்களை மனதில் வைத்து இப்படத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இக்கலகக்காரர்களுக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்தார்.

தீபிகா படுகோனேவை உயிருடன் எரிப்போருக்கு ஒரு கோடி ரூபாய் பரிசு வழங்கப்படும் என ஆர்எஸ்எஸ்–பாஜகவின் கட்டுப்பாட்டில் இயங்கும் அகில பாரதிய க்ஷத்திரிய மகாசபா அறிவித்தது. இதுபோன்ற அறிவிப்புக்களால் துணிச்சல்கொண்ட பல்வேறு மாநிலங்களில் இருக்கும் சில குழுக்கள் (fringe group) இயக்குநர் மற்றும் முன்னணி நடிகரின் தலைக்கு 50 லட்சம் முதற்கொண்டு 10 கோடி ரூபாய்வரை பரிசுகள் அறிவித்தன. ஆர்எஸ்எஸ்–பாஜக–சங்பரிவாரின் பிற தலைவர்களும் இப்படத்தின் தயாரிப்பாளர், நடிகர்கள்மீது ஆபாச வசைமாரிப் பொழிந்தார்கள்.

இவ்வாறு ஆளும் தரப்பின் மனநிலையை அறிந்த மத்திய திரைப்பட தணிக்கை வாரியமானது 'விண்ணப்பத்தில் குறை' என்றுகூறி இப்படத்தின் சான்றிதழுக்கான விண்ணப்பத்தை திருப்பி அனுப்பியது. இந்த வெறிவாத குண்டர்களாலும் பாஜக அரசாங்கத்தின் அவர்களுக்கு ஏதுவான செயற்பாடுகளாலும் சினமுற்ற பிரபல சினிமா பிரமுகர்களும் சினிமா விமர்சகர்களும் மத்திய திரைப்பட தணிக்கைத் வாரியமானது குறைபாட்டின் காரணமாக விண்ணப்பத்தை திருப்பியனுப்பியதா அல்லது தேர்தல் ஆதாயத்திற்கான தூண்டல்களின் அழுத்தத்தால் திருப்பியனுப்பியதா என வினவினர். அரசாங்கத்தின் ஒப்புதல் இல்லாமல் இந்த சிறுகுழுக்களால் இப்படிப்பட்ட அறிவிப்புக்களையெல்லாம் விடவே முடியாது என அவர்கள் தெளிவாக கூறுகின்றனர். “அப்படத்தின் கதாநாயகி தீபிகாவை தாக்கப்போவதாக அச்சுறுத்திக்கொண்டிருக்கும் குண்டர்களை சிறையிலடைக்க வேண்டும்! உண்மை யாதெனில், அயோக்கியத்தனம் செய்பவர்கள் தங்களின் அசிங்கமான அரசியலை வளர்ப்பதற்கு தொடர்ச்சியாக மிரளவைத்திடும் அளவிற்கு திரைப் படத்துறையை இலகுவான இலக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். மோசமான விஷயம் யாதெனில், இவர்கள் அதிலிருந்து தப்பித்தும் விடுகின்றனர்” என சிலர் அவர்களைப்பற்றி சமூக ஊடகங்களில் கருத்து தெரிவித்தும் உள்ளனர். “கலாச்சார அழித் தொழிப்பு” என இதை அவர்கள் கூறுகிறார்கள், ஒட்டுமொத்த சினிமாத் துறையும் திரைப்பட விழாவை புறக்கணிக்கவேண்டும் என அழைப்பு விடுத்தனர். “ஒரு படத்திற்காக கொலை மிரட்டலைக் கூட விடுக்கக்கூடிய சிறுக்குழுக்களின் குண்டர்களுக்கு நாங்கள் அடிபணியப் போவதில்லை. இது ஒன்றும் தேசத்தின் குரலல்ல. நாட்டின் பெரும்பான்மையினர் நல்ல மனநிலையுடன் சட்டத்தின் ஆட்சிமீது நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை மறந்துவிடவேண்டாம்” என ஒரு சினிமா இயக்குநர் கூறினார்.

### ஆர்எஸ்எஸ்–பாஜகவின் மூர்க்கத்தனம்

இப்பிரச்சினையை வைத்து வெறியுணர்வு தூண்டிவிடப்பட்டதையும் சர்ச்சை கிளப்பிவிடப் பட்ட விதத்தையும் நாம் கவனத்துடன் ஆராய்ந்து பார்த்தால் ஒரு தீர்மானகரமான சதித்திட்டத்தை நம்மால் பார்க்கமுடியும். எனவே, இந்த 'பத்மாவதி' சர்ச்சையை தனித்ததொன்றாக பார்க்கமுடியாது. சகிப்பின்மை, பிரச்சினையை தீர்த்துக்கொள்ள பலத்தைப் பிரயோகித்தல், எது சரி, எது தவறு என்பதை அறிவிக்கும் தன்னிச்சையான அதிகாரத்தை தனக்குத்தானே வழங்கிக்கொள்ளுதல், எவ்வித பகுத்தறிவுக்குட்பட்ட எந்த வாதத்தையும் மறுதலித்தல், குருட்டுத்தனத்தையும் வெறியுணர்வையும் தூண்டி விடுதல், ஜனநாயக செயற்பாடுகளின் அடிப்படைக் கூறுகளை காலிலிட்டு மிதித்தல், வேண்டாதவர்களை எப்படியேனும் அடிபணியவைத்தல் போன்றவைதானாகும் இது. எவ்வித தண்டனை யுமின்றி கொடூரமாக கொலைசெய்தலும் கூட இவற்றின் பங்கும் பகுதியுமாக இருக்கிறது. சில நாட்களுக்குமுன்பு, சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த புலம்பெயர்ந்த தொழிலாளி ஒருவரை அடித்துக் கொன்றதோடு மட்டுமின்றி அவரது உடலை தீயிட்டு கொளுத்திய நிகழ்வை வீடியோ பதிவு செய்து சமூக வலைதளங்களில் வைரலாக்கப்பட்டது. அவர் கலப்பு மத மணத்திற்கு துணைபோனார் என்றுகூறி இப்பேய்த்தனத்தை நியாயப்படுத்தவும் செய்தனர். உண்மையில் இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமும் கொடூர கொலைகளும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. தாத்ரி, ஆல்வார், உதாம்பூர், கிர்கியா, லடேஹார், சத்ரா, கோட்பா, பேடியா, குணா, மான்சோர், மேவாட், ரீயாசி, பலாப்காக், உனா போன்ற இடங்களிலும் பல்வேறு மாநிலங்களிலும் சமீபத்தில் நிகழ்ந்த முஸ்லீம் மற்றும் தலித்துக்கள் மீதான மிருகத்தனமான படுகொலைகளாகும். விஞ்ஞானிகள், பத்திரிகையாளர்கள், பிரபலமான பகுத்தறிவுவாதிகளும்கூட கொடூரமாக கொல்லப்பட்டிருக்கின்றனர்.

படங்களை தடைசெய்ய கோருதல், மேடை நிகழ்ச்சிகளைத் எதிர்த்தல், வகுப்புவாத–ஜாதீய–வெறிவாதத்தை தூண்டிவிடுவன எனக்கூறி போட்டி இசைக் கச்சேரிகளை நடத்தவிடாமல் செய்தல் போன்றவையெல்லாம் காவிப்படைகள் மற்றுமதன் கூட்டாளிகளால் அரங்கேற்றப்படுகின்றன. இவை எல்லா நிகழ்வுகளிலும் இந்து வகுப்புவாத ஆர்எஸ்எஸ்–பாஜக–சங்பரிவாரங்களை சேர்ந்தவர்கள் மீதே குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றன. பத்மாவதி படப்பிரச்சினையானது இந்த குண்டர்படையால் தயாரிக்கப்பட்ட பட்டியலின் சமீபத்திய சேர்க்கையாகும். ஒருவர் என்ன உண்ணவேண்டும், என்ன உடுத்தவேண்டும், எந்த பாடலை பாடவேண்டும், எந்த மத வழக்கத்தை பின்பற்றவேண்டும், யாரை திருமணம் செய்து கொள்ளவேண்டும், எந்த தொழிலை மேற்கொள்ள வேண்டும், என்ன எழுதவேண்டும், என்ன படிக்கவேண்டும், எந்த கருத்தை கொள்ளவேண்டும் எனத் தீர்மானிப்பது, யாரையும் எதிர்க்க ஏன் விமர்சிக்கக் கூட அனுமதிக்காதது, வரலாறென்பது எதுவாக விருக்கவேண்டும், விஞ்ஞானமென்பது எதுவாக விருக்க வேண்டும், நாகரீகமென்பதும் அநாகரீகமென்பதும் எது, கலை என்பது எது என்ற அனைத்தையும் தீர்மானிக்கும் தன்னிச்சையான உரிமையை தங்கள் தாய் அமைப்பான ஆர்எஸ்எஸ் மற்றும் அதிகாரத்திலுள்ள பாஜகவின் அரவணைப்போடு இந்த ஆயுதங்தாங்கிய காவி கும்பல்கள் எடுத்துக் கொண்டுள்ளன. தங்களுடைய உபதேசத்திற்கு அல்லது கட்டளைக்கு எவரையும் அடிபணியவைப்பதற்கு எந்தவிதமான போக்கிரித்தனத்திலும் காழ்ப்புணர்ச்சியிலும் வன்முறையிலும் ஈடுபட அதிகாரத்திலிருப்பவர்களின் கள்ள மௌனம் முழு உரிமத்தை அவர்களுக்கு வழங்குகிறது. பசுப் பாதுகாப்பு, தேசிய கீதம் பாடுவதை கட்டாயப் படுத்துவது, பள்ளி–கல்லூரிகளில் சூர்ய நமஸ்காரத்தை கட்டாயப்படுத்துவது போன்ற விஷயங்களில் அப்பட்டமாக நாம் இதைப் பார்த்தோம். சங்பரிவாரின் படையினருக்கெதிராக யாராவது ஏதேனும் சொல்லத் துணிவோரை அச்சுறுத்துவதானது தங்கள் நாஸிக் கொள்கைக்கு துப்பாக்கி முனையில் அடிபணியவைக்கும் ஹிட்லரின் படைப் பிரிவினரைப் போலவே நடந்து கொள்வதாகும்.

இந்தியாவை அவர்கள் ஒரு இந்துமதம் சார்ந்த நாடாக மாற்றியமைக்கக்கூடும், அவர்கள் சொல்லு கிறபடியான இந்துத்துவ வழக்கங்களையும் சடங்குகளையும் அனைவரும் கடைபிடிக்க வேண்டியதிருக்கும். இந்த நாட்டில் ஒருவர் வாழ விரும்பினால், எந்த கேள்வியும் கேட்காமல் வகுப்புவாத இந்துத்துவத்தை குருட்டுத்தனமாக அடிபணிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், எல்லாவிதத் தொல்லைக்கும் சித்திரவதைக்கும் ஏன் உயிரையும் விடவேண்டியதிருக்கும். சமூக சூழலை விஷமாக்குவதும், குறுகிய பிளவுவாத, ஜாதியவாத, வகுப்புவாத வெறித்தனத்தில் சமூகத்தை மூழ்கடிக்கவும், நாட்டின் கலாச்சார ஒற்றுமையை களங்கப்படுத்தவும், படைமுறைப்படுத்தப்பட்ட சிந்தனையை தூண்டிவிடவும், தனது படைக்கலன்கள் முழுவதையும் திரட்டி மனிதத்தன்மையை இழக்கச் செய்வதே ஆர்எஸ்எஸ்–பாஜக–சங் பரிவாரங்களின் இன்றைய ஒழுங்குமுறையாக ஆக்கப்பட்டிருக்கிறது. தனது ஊழல் ஒடுக்குமுறை வர்க்க ஆட்சியை நீட்டித்துக்கொள்ள ஆளும் முதலாளிவர்க்கம் நாட்டை பாசிசமயமாக்குவ தென்பது இதுதானாகும். இது சமூக முன்னேற்றத்தை தடைசெய்து மக்களை மனிதத்தன்மையிழக்கச் செய்கிறது. இது உடனடியாக முறியடிக்கப்பட வில்லையெனில் இது ஒட்டுமொத்த நாட்டின் குரல்வளையையே நெறித்துவிடும்.

பத்மாவதி படத்தின் வெளியீட்டிற்கான இந்த வெறித்தனமான எதிர்ப்பை ஆளும் ஆர்எஸ்எஸ்–பாஜகவின் கொடிய திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் பார்க்கவேண்டும். பிரபல சினிமா மற்றும் நாடக பிரமுகர்கள் உட்பட மனசாட்சியுள்ள சரியாக சிந்திக்கும் மக்கள் துணிச்சலுடன் எழுந்துநின்று, இவ்விஷயத்தில் தலையிடவும் ஒரு சமூகத்தின் கௌரவத்தைக் காக்கிறோம் என்கிற திரைமறைவில் கலை மற்றும் கலைஞர்களின் சுதந்திரத்தைக் பறிக்க முற்படும் இந்த அடாவடிக்காரர்களை தடுக்கவும் தண்டிக்கவும் மத்திய அரசை வலியுறுத்தியிருப்பதை பார்க்கும்போது மனதிற்கு மிகுந்த நெகிழ்ச்சியளிக்கிறது. எவ்வித தர்க்கத்திற்கும் செவிமடுக்காத திரைப்பட தயாரிப்பாளர்கள், நடிகர்களுக்கு கட்டளையிடுவது, தலையை கொய்துவிடுவதாகக் கூட வெறித்தனத்துடன் பகிரங்க மிரட்டல் விடுக்கும் இத்தகைய காட்டுமிராண்டிகளால் கலை மற்றும் கலைஞர்களின்மீது ஏவப்பட்டுள்ள போக்கிரித் தனத்திற்கெதிராக வெகுண்டு எழுந்துள்ளோருடன் நாமும்கூட ஒன்றுசேர்கிறோம். இதனையெதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கும் பிரபலங்கள் கலை மற்றும் கலைஞர்களின் சுதந்திரத்தை தட்டிப் பறிக்கும் எந்த நடவடிக்கையையும் மிகச்சரியாகவே எதிர்த்துள்ளனர்.

வாழ்க்கை, வாழ்வாதாரம், படைப்பிலக்கியத்தின் மீதான அனைத்துவகையான பாசிசத் தாக்குதலையும் ஒன்றுபட்டு முறியடிக்கவேண்டியது மிகவும் அவசியம் என்பதில் முழுமையாக உடன்படும் அதேவேளையில், சுதந்திரம் என்பதை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் நினைவுபடுத்தி பார்க்கவேண்டியதும் மிகவும் அவசியமாகும். இல்லாவிடில், சமூகத்தில் கலை ஏற்படுத்தும் பாதிப்பு குறித்து எவ்வித கவலையும் கொள்ளாது கலை எனும்பெயரில் எதை வேண்டுமானாலும் எல்லாவற்றையும் அரைத்துத் தள்ளும் உரிமைக்கான கோரிக்கையாக இது மாறிவிடக்கூடும். பின்பு, இது சுதந்திரம் எனும்பெயரில் அதீத சுதந்திரம் அல்லது அராஜகத்திற்கு ஒப்புதல் கோருவதாகிவிடும். அதற்கு முன்பாக, பத்மாவதி திரைப்படம் உருவானது குறித்த சில விவரங்களைப் பார்ப்போம்.

### 'பத்மாவதி' திரைப்படம் குறித்து சில வார்த்தைகள்

ஆவாதி வீரகாவியம் குறித்து மாலிக் முகமது ஜெயாஸியால் எழுதப்பட்ட நாட்டுப்பாடலைத்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# உண்மையான அறிவார்ந்த கலாச்சார இயக்கத்தால் மட்டுமே அனைத்துவகை அழுகல், அசுத்தத்திலிருந்து சமூகத்தை, கலையை விடுவிக்க முடியும்

3ம் பக்கத் தொடர்ச்சி

தழுவிய கற்பனைக் காவியத்தை அடிப்படையாகக் கொண்டதே பத்மாவதி திரைப்படம் என அதன் தயாரிப்பாளர் தற்போது சொல்கிறார். இருந்தபோதிலும், மேவார் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ராணி பத்மாவதியின் வாழ்க்கை சரித்திரம் அல்ல, மாறாக முற்றிலும் புனைக்கதையேயாகும். ஆனால், உயிருடனோ அல்லது இறந்தவரோ எவரையும் இப்படம் ஒத்திருக்கவில்லை, யாருடைய உணர்வுகளையும் புண்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்று இப்படம் குறித்த சர்ச்சை கிளம்புவதற்குமுன் தெளிவான எவ்வித அறிவிப்பும் விடப்படவில்லை. மாறாக, இப்படத்தின் முக்கிய ஆண் கதாபாத்திரமானது சித்திரவதை மற்றும் பாலியல் நடவடிக்கைகளால் மோசமாக பெயரெடுத்த அலாவுதீன் கில்ஜியாகும். 1303ல் சிட்டூரை அலாவுதீன் கில்ஜி தாக்கியது ஒரு வரலாற்று நிகழ்வாகும். பத்மினியின் தீக்குளிப்பு குறித்து வரலாற்றுச் சான்றுகள் தேவையான அளவில் இல்லை. அதன் நம்பகத்தன்மையை நவீன வரலாற்றாசிரியர்கள் மறுத்துள்ளனர். இங்கே பொருத்தமான விஷயம் எதுவெனில், வரலாறு சித்தரிக்கப்படவேண்டுமெனில், ஒருவர் கதாபாத்திரங்கள் மற்றும் உண்மைத்தன்மை குறித்து நேர்மையாக இருத்தல் வேண்டும். இதுபோன்றே, புராணம், புனைவு அல்லது வீரகாவியம் ஆகியவற்றை மையமாகக்கொண்டு திரைப்படம் தயாரிக்கப்பட்டால் அதிலுள்ள சில கதாபாத்திரங்கள் அவை புனையப்பட்டவைகளாக இருந்தாலும்கூட மக்கள் மனதில் மிகுந்த மரியாதையை ஏற்படுத்திவிடுகின்றன என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். உணர்வுகளை காயப்படுத்தக்கூடிய, எதிர்மறை பிரதிவினையை ஏற்படுத்திவிடக்கூடிய, தேவையற்ற சர்ச்சையை ஏற்படுத்தக்கூடிய வகையில் கதாபாத்திரங்களை ஏன் சித்தரிக்க வேண்டும். வகுப்புவாத, ஜாதியவாத, பிராந்தியவாத, இனவாத வெறித்தனத்தினடிப்படையில் பிளவை ஏற்படுத்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும் பிளவுவாத சக்திகளுக்கு வாய்ப்பை ஏன் தரவேண்டும்?

## கருத்து சுதந்திரத்தை பறிப்பது தடுக்கப்படவேண்டும்

ஆனால் நாம் முன்பே கூறியதுபோல், ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் அல்லது பெண்களின் கௌரவத்தை குலைக்கிறார்கள் என்று கூக்குரலிட்டுக்கொண்டு காவிக் கூட்டமோ அல்லது கைக்கூலிகளோ பலாத்காரமாக ஒரு திரைப்படத்தை தடைசெய்யலாம், மேடை நிகழ்ச்சிகளுக்கெதிராக ரகளை செய்யலாம் அல்லது இயக்குநர்களையும் நடிகர்களையும் அச்சுறுத்தலாம் என்று இதற்கு அர்த்தமல்ல. அதேபோல, ‘நியாயமான தடை’யை அமுல்படுத்துகிறோம் எனும்பெயரில் அரசாங்கமும் ஒரு திரைப்படத்திற்கோ, மேடை நிகழ்ச்சிகளுக்கோ தடைவிதிக்கலாம் என்றும் அர்த்தமல்ல. ராணி பத்மினியை களங்கப்படுத்திவிட்டார்கள் என்று வேதனைப்படுவதாக நாடகமாடும் இவர்கள் தங்கள் மாநிலங்களில் அதிகரித்துவரும் பாலியல் பலாத்காரம், கும்பல் பலாத்காரம், வரதட்சணை இறப்புக்கள், பெண் சிசுக்கொலை, கருக்கொலை, பெண் கடத்தல்கள், ஆண்பிள்ளையை பெற்றெடுக்க ‘இயலாத’ பெண்களை சித்தரவதைசெய்தல், அதிகரித்துவரும் பிரசவ இறப்பு என பெண்கள் கௌரவத்தை சீரழிப்பது குறித்தெல்லாம் மௌனிகளாய் இருக்கின்றனர். ரஜபுத்திரர்களின் பெருமைக்கு வக்காலத்து வாங்கும் இவர்களின் வேடதாரித்தனத்தை இது நன்கு வெளிப்படுகிறது. வாழ்வின் அடிநாதத்தையே குத்திக்குதறும் ஆபாசம், வன்முறை காட்சிகள் நிறைந்த கேடுகெட்ட படங்கள் தினந்தோறும் திரையிடப்பட்டுவருவது குறித்து இவர்களுக்கு எவ்விதக் கவலையுமில்லை.

எனவே, தம்முடைய வகுப்புவாத, ஜாதீயவாத, இனவாத முத்திரையைத் தாங்கிநிற்கும், சமூகத்தின் சுத்திகரிப்பாளர்கள் என தங்களைத் தாங்களே அழைத்துக்கொள்ளும் இவர்கள் ஏதேனும் அற்ப காரணங்களைக் கூறிக்கொண்டு, கேவலமான வாதங்களை முன்வைத்து காழ்ப்புணர்ச்சியுடன் எந்தவொரு திரைப்படத்தையோ, மேடை நிகழ்ச்சியையோ, இசைக்கச்சேரியையோ எதேச்சாதிகாரமாக, தன்னிச்சையாக தடைசெய்ய இவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. ஜாதீய, இனவாத வெறித்தனத்தைத் தூண்டிவிடவும் துருவமயப்படுத்தல் மூலம் தேர்தல் ஆதாயத்தை அறுவடை செய்வோருக்கு உதவுவதுமே இவ்வெதிர்ப்பின் நோக்கம் என்பது தெளிவு. இவ்வெதிர்ப்பாளர்களின் மூர்க்கத்தனத்திற்கு ஒப்புதலளிக்கும் பாஜக அரசாங்கத்தின் அதீத நடிவடிக்கை மேலும் இதற்குச் சான்றாகும்.

இதன் காரணமாக, திரைப்படத் தணிக்கைவாரியம் அனுமதித்த பின்பும், உச்ச நீதி மன்ற அனுமதி கிடைத்த பின்னரும்கூட, இத்திரைப்படம் வெளியிடப்படுவது தாமதப்பட்டு வருகிறது. அப்படத்தின் நிறை, குறைகள் குறித்து விமர்சிக்கவும் நம்மால் இப்போது முடியாது. சர்ச்சையில் ஈடுபட்டுள்ள அனைவருமே இச்செயற்முறைப் போக்கைதான் பின்பற்றமுடியும். கலை மற்றும் கலைஞர்களின் சமூக நோக்கம் மற்றும் கலையின் இலக்கணம் குறித்த தவறான புரிதல்கள், அசுத்த எண்ணங்கள், தவறான விளக்கங்களிலிருந்து சமூக கட்டமைப்பை விடுவிக்கும் தீவிரமான உண்மையான அறிவு சார்ந்த, கலாச்சார இயக்கமே அனைத்துவகையான ஆபாசம் பிதற்றல் சீர்கேடுகளுக்கெதிராக சமூகத்தை பாதுகாக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். சமூக வளர்ச்சிக்கு ஏதுவான சமூக சூழல் எந்த அளவிற்கு உதவி புரியுமோ அந்த அளவிற்கு உண்மையான கலை துளிர்த்து மலருவதற்கான மண் மேலும் வளமாகும். இதுபோன்ற பிரச்சினைகளை வன்முறையால் சரிசெய்துவிடமுடியாது. கலை, கலைஞர்களுடைய சதந்திரம் குறித்த பிரச்சினை, எழுந்துவரும் உயர்ந்த அறிவார்ந்த, சித்தாந்த, கலாச்சார இயக்கத்தின் கைகளில் விடப்படவேண்டும். அப்படியானால், சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படுவதையும் அல்லது முறையாக அடையப்பெற்று அனுபவிக்கப்படுவதையும், வாழ்வின் உண்மையான தேவையை பூர்த்திசெய்ய கலை உருவாக்கப்படுவதையும் வடிவமைக்கப்படுவதையும் சமூகம் கவனித்துக் கொள்ளும். அரசு அதிகாரமோ அல்லது அரசிற்கு வெளியிலுள்ள சக்திகளோ அல்லது நபரோ மிருக பலத்தையும் சர்வ அதிகாரத்தையும் வைத்துக் கொண்டு தீர்மானிக்கமுடியாது. இவ்விஷயத்தில், சினிமா, தொலைக்காட்சி, இலக்கியம், மற்றும்பிற தொடர்பு சாதனங்களின்மூலம் ஆபாசம், நெறிபிறழ்வு, அநாகரீகம், வக்கிரத்தை ஓயாது பரப்புவது குறித்து சரியாக சிந்திக்கும், கலையை விரும்பும் மக்கள் அனைவரும் ஆழ்ந்த கவனம் கொள்ளவேண்டும். தனது கிழடுதட்டிப்போன ஒடுக்குமுறை ஊழல் ஆட்சிக்கு தேவையான, ஆளும்வர்க்கம் விரும்பக்கூடிய அது போற்றி வளர்க்கக்கூடிய ஒரு அசுத்தமான, கீழ்த்தரமான சமூக மனநிலையை உருவாக்கி, நாட்டின் குறிப்பாக இளைஞர்களின் தார்மீக முதுகெலும்பை ஒடிப்பதற்கு இவையெல்லாம் உதவிபுரிகின்றன. கலைஞர்களின் சுதந்திரம் எனும்பெயரில் இவையெல்லாம் எடுத்துச் செல்லப்படுகின்றன. இருந்தபோதிலும், கலை–இலக்கியத்தின் குரல்வளையை நெறிக்க எவ்வகையிலும் பலாத்காரத்திற்கு இடமில்லை. மேற்சொன்ன அறிவுசார்ந்த, கலாச்சார இயக்கத்தின் எழுச்சி மட்டுமே இவ்வழுகலைத் தடுக்கமுடியும். வேறு மாற்று ஏதும் இல்லை ■

# பாஜக அரசாங்கத்தின் அந்நிய நேரடி முதலீட்டை (FDI) தாராளமயமாக்கியது ஒரு அப்பட்டமான மக்கள் விரோத, ஏகபோக சார்பு நடவடிக்கையெனவும் அது முறியடிக்கப்பட வேண்டுமெனவும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) அறைகூவி அழைக்கிறது

*எஸ்யுசிஐ ( கம்யூனிஸ்ட் ) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ்கோஷ் அவர்கள் 11.01.2018 அன்று விடுத்துள்ள அறிக்கை:*

பாஜக அரசாங்கமானது, அதன் அப்பட்டமான மக்கள் விரோத, ஏகபோக சார்பு கொள்கை வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டு, கேந்திரத் துறைகளில் அவ்வப்போது தனியார்மயத் தாக்குதல்களை மக்களின் விருப்பத்திற்கு மாறாகத் தொடுத்துக்கொண்டு வருகிறது. இப்போது அது ஒற்றை – முத்திரை சில்லரை வணிகத்தில் (Single Brand Retail) 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை அறிவித்து, மனை வணிகத் தரகு நிறுவனங்களுக்கு (Real Estate Broking Firms) 100சதவீத அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிப்பதின் மூலம் மனை வணிகத் துறையிலும், அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கையின் அர்த்தத்தில், “மருத்துவ சாதனங்கள்” என்பதின் விளக்கத்தில் திருத்தம் செய்ததின் மூலம் சுகாதார நலத்துறையிலும் அதிக அளவில் வெளிநாட்டு மூலதனம் ஊடுருவுவதற்கான வழியைத் திறந்துவிட்டிருக்கின்றது. பல–முத்திரை சில்லரை வணிகத்திலும்கூட (Multi-Brand Retail), அந்நிய நேரடி முதலீடு ஊடுருவுவதற்கான வழித்தடம் நிச்சயம் விரைவிலேயே திறந்துவிடப்படுமோ என்ற அச்சம் ஏற்படுவதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. அந்நிய நேரடி முதலீட்டின் சீரழிவுமிக்க விளைவு, சில்லரை வணிகத்துறையில் பெருமளவிலான வேலையிழப்பை ஏற்படுத்தி, வறுமையிலிருக்கும் பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கிக்கொண்டிருக்கும் உள்நாட்டு சில்லரை வணிகக் கடைகளை படிப்படியாக அகற்றிவிடும். அத்துடன், உள்நாட்டு மற்றும் ஏகபோகம் இவ்வணிகத்தைக் கைப்பற்றுமானால், அவைகளின் ஏகபோக விலைநிர்ணயக்கொள்கை ஏற்கனவே அதிகரித்துக்கொண்டிருக்கும் விலைவாசியை மேலும் அதிகரிக்கும்.

நிதி ஆட்சியதிகாரம் கொண்டவைகளாக ஏற்கனவே வளர்ந்துவிட்ட, அந்நிய நேரடி முதலீடு எனும் வடிவத்தில் நிதி மூலதனத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதின் மூலம் ஏகாதிபத்திய அம்சங்களையும் அடைந்துவிட்ட இந்திய ஏகபோகங்கள், மந்தமாயிருக்கும் உலகச் சந்தையில் கடுமையான போட்டியைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன என்பதைக் காணலாம். எனவே, பல்வேறு வெளிநாட்டுச் சந்தையில் போட்டியிடுவதற்கான சில சலுகைகளை, முன்னுரிமைகளை, சாதகங்களைப் பெற்றிட, இந்திய ஏகபோகங்கள் தங்களின் சொந்த சந்தையை ஏகாதிபத்திய சக்திகளுக்கு, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குத் திறந்துவிட்டிருக்கின்றனர். இக்கட்டாயத்தின் பேரில்தான், பூர்ஷ்வாக்களின் வர்க்க நலனுக்கு அடிபணிந்து நிற்கும் பாஜக அரசாங்கமானது, அதன் பாதுகாப்புத் துறை உள்ளிட்ட நாட்டின் பொருளாதாரத்தை அந்நிய நேரடி முதலீட்டிற்குப் படிப்படியாகத் திறந்துவிட்டிருக்கிறது.

பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சக்திவாய்ந்த எதிர்ப்பியக்கங்களைத் துவக்க வேண்டிய தேவை இருக்கின்ற இத்தருணத்தில், எதிர்க்கட்சிகளானவை, குறிப்பாக தங்களை மார்க்சிஸ்டுகள் என்றும் இடதுசாரிகளென்றும் அழைத்துக்கொள்ளக்கூடியவர்கள், வழக்கமான அறிக்கைகளை விடுப்பதுடன் அதனை நோக்கிய உண்மையான முயற்சி எதையும் எடுப்பதில்லை என்பதை மிகுந்த கவலையுடன் பார்க்கிறோம். காங்கிரஸ் ஆட்சியின்போது அது அந்நிய நேரடி

தொடர்ச்சி 8ம் பக்கம்

# ஆர் கே நகர் இடைத்தேர்தல் சுட்டிக்காட்டும் சில அம்சங்கள்

ஆர்கே நகர் தொகுதி இடைத்தேர்தல் தமிழகமே உற்றுக் கவனித்தது. ராதாகிருஷ்ணன் நகர், ஏழை மக்கள் அதிகம் வாழும் தொகுதியாகும். இத் தொகுதிக்குள் போதிய ஆரம்ப, நடுத்தர, உயர்நிலைப் பள்ளிகள் கிடையாது. இங்கு வாழும் மக்கள் பெரும்பாலும் தினக்கூலிகளாவர். வேலை கிடைக்காமல் வாழும் இளைஞர்களே இங்கு அதிகம். இத்தொகுதியில் சென்னையின் பிரதான பகுதிகளை இணைக்கும் பஸ் வசதி மிகவும் குறைவு. ஆனால் அரை கிலோ மீட்டருக்கு 4 டாஸ்மாக் கடைகள் உள்ளன. குறைந்த பட்ச சுகாதாரம்கூட பராமரிக்கப் படுவதில்லை. மாநகராட்சிக் குழாயில் வரும் குடிநீரில் பல ஆண்டுகளாக சாக்கடை கலந்து வருகின்றது. சென்னையின் மிகப்பெரிய குப்பைமேடு இப்பகுதியின் கொடுங்கையூரில் உள்ளது. அதன் மாசு ஆர் கே நகர் முழுமையும் பரவிகின்றது. ஒருநாள் மழை பெய்தால்கூட பல பகுதிகளில் சாக்கடை கலந்த மழைநீர் வீடுகளுக்குள் புகுந்துவிடும். மழை நீரில் மின்சாரம் பாய்ந்து அடிக்கடி மனித உயிர்ப்பலி ஏற்படுவதுமுண்டு. இப்படி தொடர்ந்து அனைத்து வகையிலும் பின்தங்கிய பகுதிதான் ஆர் கே நகர் தொகுதியாகும்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவால் ஏப்ரல் 2017லில் இங்கு இடைத்தேர்தல் நடக்கவிருந்தது. ஆனால், 89கோடி ரூபாய் அளவிற்கு வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடா நடந்ததாக கூறி தேர்தல் கமிஷன் அத்தேர்தலை ரத்து செய்தது.

## கேள்விக்குறியான தேர்தல் கமிஷனின் தேர்தல் அறிவிப்பு

இத்தொகுதியில் 44 ஆயிரம் போலி வாக்காளர்கள் பெயரை நீக்க வேண்டும் என்றும் பணப்பட்டுவாடாவில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து விசாரிக்க வேண்டும் என்றும் திமுக இரண்டு வழக்குகளை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்தது. இதற்கு பதிலளித்த தேர்தல் ஆணையம், திமுக கோரியதைவிட அதிகமாக போலி வாக்காளர்களின் பெயர்களை நீக்கியுள்ளதாகவும் பொங்கல் பண்டிகை நெருங்குவதால் மீண்டும் பணப்பட்டுவாடா நடக்கக்கூடும் என்றும் டிச. 31ம் தேதிக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். உயர்நீதி மன்றம் இந்த வாதங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், கடைசியாக தேர்தலை ரத்து செய்த நாளிலிருந்து ஆறு மாதத்திற்குள் தேர்தலை முடிக்க வேண்டும் என உத்தரவிட்டது.

தேர்தலுக்கு முன்பாக, பழனிச்சாமி – பன்னீர் செல்வம் அணிக்கு இரட்டை இலைச் சின்னத்தையும் அதிமுக என்ற பெயரையும் தேர்தல் ஆணையம் நவம்பர் 23ஆம் தேதி ஒதுக்கி தீர்ப்பு வழங்கியது. மறுநாளே, இடைத்தேர்தல் டிசம்பர் 21ஆம் தேதி நடைபெறும் என அறிவித்தது. இதனால் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டின் மீது சந்தேகம் உண்டானது. அதிமுக மற்றும் பாஜகவைத் தவிர அனைத்துக் கட்சிகளும் தேர்தல் ஆணைத்தின் நடுநிலைமையை கேள்வி கேட்டன.

## தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு

பணப்பட்டுவாடா நடந்ததால்தான் தேர்தலை நிறுத்தினோம் என்று சென்ற முறை கூறியது. ஆனால் அதில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுத்தனரா என்ற கேள்வியும் மக்கள் எழுப்பினர். மீண்டும் அதே வேட்பாளர்கள் போட்டியட அனுமதித்திருப்பதும் இக்கேள்வியை வலுப்படுத்தியது. ஆனால் இம்முறை அவ்வாறு பணப்பட்டுவாடா நடக்காமல் பார்த்துக் கொள்வோம் என்றும் அதைத் தடுக்க, இதற்கு முன் இல்லாத பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியது.

தேர்தல் விதிமீறல்களைக் கவனிக்க 87 இடங்களில் 225 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு 24 மணிநேரமும் பதிவு செய்யப்படும். இத்தொகுதியில் வசிப்போரின் இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்களின் கணக்கெடுப்பும் நடத்தப்பட்டு வாகன உரிமையாளர்களுக்கு பாஸ் வழங்கப்படும். வெளி வாகனங்கள் தொகுதிக்குள் நுழைவது தடுக்கப்படும். அப்படி வரவேண்டும் என்றால் தேர்தல் நடத்தும் அலுவலர் அனுமதி பெற்றுத்தான் வரவேண்டும். தொகுதியில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரைதான் வீடுவிடாகச் சென்று பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என்று பல்வேறு நடவடிக்கைகளும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. தொகுதி முழுவதும் வாக்குச்சாவடிகள் பதற்றமானவைகளாக அறிவிக்கப்பட்டு துணை ராணுவப் படையும் குவிக்கப்பட்டது.

இத்தனைக் கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்தியும் பணப்பட்டுவாடாவை தேர்தல் ஆணையத்தால் தடுத்து நிறுத்த முடியவில்லை. இறுதியில் அதிமுகவின் இரு அணிகளிலிருந்தும் பணப்பட்டுவாடா செய்ததாக அனைத்துக் கட்சிகளும் குற்றம் சாட்டின அனைத்து ஊடகங்களிலும் விவாதிக்கப்பட்டன. சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு வேட்பாளர் ரூ27 லட்சம் வரை பிரச்சாரத்திற்கு செலவு செய்து கொள்ளலாம் என்பது சட்டவிதி. இக்கட்சிகளின் வேட்பாளர்கள் தொகுதியில் ஒருமுறை வலம் வந்தால் லட்சங்கள் அல்ல, கோடியில் செலவாகும் என்பது தேர்தல் ஆணையத்திற்கு தெரியும். வழக்கம்போல் இவர்கள் மேல் எந்த நடவடிக்கையையும் ஆணையம் எடுக்காது என்பதும் மக்களுக்குத் தெரியும்.

எனவே ஏழை எளிய, உழைக்கும் மக்களையும் அவர்களை உண்மையில் பிரதிபலிக்கும் கட்சிகளையும் வேட்பாளர்களையும் பிரச்சாரம் செய்ய விடாமல், மக்களிடையே செல்லவிடாமல் தடுப்பதற்கே இக்கட்டுப்பாடுகளாகும். அரசியலில் உழைக்கும் மக்கள் பங்கெடுப்பதன்மூலமாக இந்த அரசியல், முதலாளித்துவ அரசியல் என்பதையும் முதலாளிகளின் நலனை பாதுகாக்கக்கூடிய ஆட்சியென்பதையும் மக்கள் புரிந்து கொள்வார்கள். மேலும் இக்கட்சிகள் யாவும் முதலாளிகளின் நலனை பாதுகாக்கக் கூடியவைகள் என்பதையும் மக்கள் புரிந்து கொண்டுவிடுவார்கள். இதைத் தடுப்பதுதான் ஆணையத்தின் உண்மையான நோக்கம்.

தேர்தல் ஆணையம் நடுநிலை தவறிவிட்டது என பலர் குற்றஞ்சாட்டியுள்ளனர். முதலாளித்துவ கட்சிகளுக்குள் அதன் வேட்பாளர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில்தான் நடுநிலை தவறிவிட்டதாக இவர்கள் பொருள்படுத்துகின்றனர். அப்படி நடுநிலையாக செயல்பட்டாலும்கூட, ஆணையத்தின் உண்மையான நடவடிக்கைகளும் விதிமுறைகளும் முதலாளித்துவ வர்க்கக் கட்சிகளுக்கு சாதகமாக, ஏழை உழைக்கும் மக்களைப் பிரதிபலிக்கும் பாட்டாளிவர்க்கக் கட்சிக்கு எதிராகவே இருக்கின்றது என்பதே நிதர்சன உண்மையாகும். எடுத்துக்காட்டாக மாலை 5மணிக்குள் வீடுவீடாக பரப்புரை செய்யக் கூடாது என்ற விதி, முதலாளித்துவ கட்சிகளுக்கு பொருந்தாது. அவர்களின் ஊடகங்கள் 24மணி நேரமும் வீட்டிற்குள்ளேயே முழங்கிக் கொண்டிருக்கும்.

எப்படியிருப்பினும் நவம்பர் 27முதல் வேட்புமனு தாக்கல் துவங்கியது. அதிலும் ஏராளமான குளறுபடிகள் இருந்ததை மக்கள் கண்ணுற்றனர். டிசம்பர் 7ம் தேதி இறுதிப் பட்டியலில் மொத்தம் 59பேர் போட்டியிட்டனர். பிரதானமாக அதிமுகவிற்கும், அக்கட்சியைக் கைப்பற்றும் நோக்கம் கொண்ட டிடிவி தினகரனுக்கும், அதிமுக வாக்குகள் சிதறும் என்று எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்த திமுகவிற்கும் இடையே போட்டி மேலோங்கியிருந்தது. இக்கட்சிகள் எவையும் மக்கள் பிரச்சினைகள் தீர்ப்பதைப்பற்றி உண்மையில் கவலைப்படவில்லை.

## பணம் கொடுத்து ஓட்டுவாங்கும் அளவிற்கு தாழ்ந்துவிட்ட கட்சிகளின் தார்மீகத் தரம்

மக்களிடம் கொள்ளையடிக்கப்பட்ட பணம், ஊழல் பணம் என்று கூறி, இது 'உங்கள் பணம் வாங்கிக் கொள்ளுங்கள், வாங்கிக்கொண்டு வாக்குகளை தங்களுக்கு அளியுங்கள்' என்று தங்களை மிகவும் நியாயவான்களாக காட்டிக் கொண்டு, சில கட்சியினர் வாதிடுகின்றனர். இந்தவாதம், ஊழல் நடந்துகொண்டுதான் இருக்கும், அதை ஒழிக்க முடியாது என்ற எண்ணத்தை மக்களிடையே ஏற்படுத்துகிறது. பணம் கொடுத்து ஓட்டுக்களைப் பெற்று வரும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியில் அமர்ந்து மக்கள் விரோதக் கொள்கைகளை எடுக்கும்போது அதை எதிர்த்து மக்கள் போராட்டத்தில் ஈடுபடமுடியாமல் தடுக்கின்றது. இறுதியாக, சுரண்டல் ஆட்சி எப்பொழுதும்போல் தடையின்றி நடக்கிறது. ஆகையால் மக்கள், உண்மையான மக்கள் நல அரசாங்கத்தையும் நேர்மையான வேட்பாளர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், தங்களுக்கு பணம் கொடுப்பதை வாங்க மறுப்பது மட்டுமல்ல, அதை எதிர்க்கவும் வேண்டும்.

## மக்கள் கவனத்தை ஈர்த்த எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பரப்புரை

இவ்வாறாக, ஜனநாயகமற்ற முதலாளித்துவ தேர்தல் அமைப்பையும் அதற்குச் சேவை செய்யும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளையும் அம்பலப் படுத்தி, மக்கள் பிரச்சினைகளை முன்னிறுத்தி தொகுதி முழுதும் எமது கட்சி செய்த ஓய்வில்லாப் பிரச்சாரம் மக்களால் கூர்ந்து கவனிக்கப்பட்டது. இதன் காரணமாக சில தனியார் ஊடகங்களும் வேட்பாளரை பேட்டி எடுத்தன. பல பகுதிகளிலும் இளைஞர்கள் எமக்கு ஆதரவு தெரிவித்தனர். ஆயிரக்கணக்கில் கட்சியின் துண்டுப் பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டன. பணம் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியபோதும், அதில் அடித்துச் செல்லப் படாமல் சுயநலமின்றி, சமூக உணர்வோடு இளைஞர்கள் கட்சியின் பரப்புரை நிகழ்ச்சிகளில் ஆக்கப் பூர்வமாக கலந்து கொண்டனர். ஒன்றாகக் கூடி, எளிய உணவைச் சமைத்து உணவருந்தி, காலையும் மாலையும் இளைஞர்களும் பெண்களும் தொகுதி முழுவதும் சுற்றி வந்த காட்சி, அப்பகுதி மக்களை ஈர்த்தது. குறிப்பாக, சிபிஐ, சிபிஐ (எம்) கட்சிகள் மக்கள் போராட்டத்தை விடுத்து தேர்தல் இலாபத்திற்காக திமுகவுடன் சந்தர்ப்பவாதக் கூட்டு வைத்துக்கொண்டன. இந்நிலையில், மக்கள் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தனித்துப் போட்டியிட்டதையும் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டையும் தெளிவாக கண்டுணர்ந்தனர். சிபிஐ (மா–லெ) தோழர்கள் எமக்கு ஆதரவு தெரிவித்து பரப்புரையாற்றினர்.

## ஆளும் கட்சிகளின் மீதான மக்களின் கோபத்தை வெளிப்படுத்திய தேர்தல் முடிவு

தேர்தலில் டிடிவி தினகரன் வெற்றிபெற்றார். முந்தைய தேர்தலில் பணப்பட்டுவாடா செய்தார் என்பதால் தேர்தல் ரத்து செய்யப்பட்டது. பிறகு இவர்மீது மத்திய பாஜக வருமானவரி சோதனைகளை நடத்தியது. அன்னியச் செலாவணி வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தது. கடைசியில் கட்சியின் பெயர், சின்னம் போன்றவை மறுக்கப்பட்டது. மாநிலத்தில் ஆளும் கட்சியினரும் இவருக்கு எதிராக பல நடவடிக்கைகளை எடுத்தனர். அப்படியும் இவர் எவ்வாறு வெற்றிபெற முடிந்தது?

காரணம், சிறுதொழில், சிறுவணிகம் போன்றவற்றை அழித்த மத்தியில் ஆளும் பாஜகவின் மக்கள் விரோத பணமதிப்பு நீக்க நடவடிக்கையும், ஜிஎஸ்டி வரிவிதிப்பும், நீட் தேர்வும், ரேஷன் மானியக் குறைப்பும், சக்கரை விலையை ஏற்றியதும் மத்திய பாஜக அரசாங்கத்தின் மீது மக்களியே கடும் கோபத்தை ஏற்படுத்தியது. அதே சமயம், இதையெல்லாம் எதிர்க்காமல் பாஜகவுடன் கை கோர்த்துக்கொண்டு அதிமுக ஓபிஎஸ்–இபிஎஸ் அணி செயல்பட்டதும் மக்களிடையே கடுங் கோபத்தை உருவாக்கியது. ஒக்கி புயல் ஏற்படுத்திய பேரழிவிலிருந்து மீனவர்களையும் மக்களையும் மீட்க ஆளும் அதிமுகவின் சிரத்தையற்ற நடவடிக்கைகள் அதிமுக ஆட்சியின் மீது மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியது.

அதேசமயம், பாஜகவின் கொள்கைகளுக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை திமுக எடுக்கவில்லை. மேலும், இந்தத் தேர்தலை தமிழ் நாட்டில் ஆட்சி மாற்றத்திற்கான ஒரு தேர்தலாகவும் அத்தொகுதி மக்கள் பார்க்கவில்லை. பாஜகவிற்கு எதிராக இருக்கும் அதிமுக அணியாகவே டிடிவி தினகரனை மக்கள் கருதினர்.

இடைத்தேர்தலில் ஆளும் கட்சியினரும் டிடிவி தினகரனும் பணத்தை வாரியிறைத்து ஓட்டுக்களை விலைபேசினர். இச்செயல், எப்படி அழுகிப்போய் விட்ட இந்த முதலாளித்துவமைப்பில் சுதந்திரமாகவும் ஜனநாயகமாகவும் நடுநிலையோடும் தேர்தலை நடத்த முடியாது என்பதையும், ஏழை நடுத்தர மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் வேட்பாளர்களும் நடைமுறையில் களத்தில் நிற்கவே முடியாமல் போய்விடுகிறது என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

தேர்தலின் முடிவு, ஆர்கே நகர் தொகுதி மக்களின் வாழ்வில் எந்த மாற்றத்தையும் கொண்டு வராது. மீண்டும் அதே சாக்கடைக் குடிநீர், எரியும் குப்பைக்களத்தின் மாசு, கல்வியின்மை, வேலையில்லாத் திண்டாட்டம் என மக்களின் வாழ்க்கையில் அவலங்கள் தொடரும். மத்திய மாநில அரசாங்கங்களின் முதலாளித்துவ ஆதரவு கொள்கைகளை எதிர்த்தும், பகுதிவாழ் மக்களின் சுகாதாரப் பிரச்சினைகளை தீர்க்கக் கோரியும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ன் போராட்டங்கள் தொடரும். மக்கள் பிரச்சினைகளை மையமாக வைத்து இடதுசாரி சக்திகள் ஒன்றுபட்டு போராட வேண்டும் என்ற அறைகூவலையும் எமது கட்சி தொடர்ந்து விடுக்கும். மக்கள் இப்போராட்டங்களை ஆதரித்து அவற்றில் பங்கெடுத்து வலிமை பெறச்செய்வதன் மூலமே உண்மையான தீர்வை எட்ட முடியும் ■

# பாடுபடும் மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்க மதவாதம், ஜாதியவாதம், குறுகியவாதம், தேசிய வெறிவாதம் தூண்டிவிடப்படுகிறது

2ம் பக்கத் தொடர்ச்சி

தலைக்குமேல் தொங்கிய ஜிஎஸ்டி கத்தியானது கீழே வீழ்ந்தது. அனைத்துவித சரக்குகள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்திடும் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத நிறுவனங்களிடம் உற்பத்தி செய்யுமிடத்திலேயே இப்போது வரி வசூலிக்கப்படும். அதற்காக, 4.5 கோடி சிறு மற்றும் நுண் நிறுவனங்கள் (Small and Micro Enterprises) உள்ளிட்ட 6.34 கோடி குழுமமாக்கப்படாத (Unincorporated) நிறுவனங்கள் ஜிஎஸ்டி சட்டப்படி நடந்திட அவைகள் இணையதளத்தில் பதிவுசெய்வதற்கான உள்கட்டமைப்பை ஏற்படுத்திட வேறு வழியின்றி கூடுதல் செலவை ஏற்க வேண்டிய தேவையேற்பட்டது. இன்னுமொரு வழியில், அவைகள் வாங்கும் உள்ளீடுகளின் (Inputs) அதிகரித்துவரும் விலைகளால் சிறு நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன. உதாரணமாக, ஜவுளி நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் 4சதவீத துணிகள் கலப்பு ஜவுளி ஆலைகளிடமிருந்தும் (Composite mills - ஒரே இடத்தில் நூல் உற்பத்தி முதல் அனைத்து துணிவகைகள், ஆடைகள் உற்பத்தி செய்யும் ஆலைகள்) மீதமுள்ள துணிகள் சிறு உற்பத்தியாளர்களிடமிருந்தும் வாங்கப்படுகின்றன. செயற்கை நூலுக்கு (Synthetic yarn) 18சதவீத ஜிஎஸ்டி வரி விதித்திருப்பதின் மூலம் பெரும்பாலும் கீழ் நடுத்தர வர்க்கத்தினர் பயன்படுத்தும் செயற்கைத் துணிகளின் உற்பத்திச் செலவானது அதிகரித்துக்கொண்டிருக்கிறது. ஜிஎஸ்டி சட்டத் தேவையின்படி நடந்து கொண்டு அவ்வரியை உற்பத்தி விலையில் சேர்த்ததால் அதுவும்கூட சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தியது.

உண்மையில், ஜிஎஸ்டி வரிவிதிப்பு முறை வந்த பின்பு இப்போது அவைகள் ஏற்கனவேயிருக்கும் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யும் வேலை முடக்கம் செய்தும் (லே–ஆஃப்) வருகின்றன. ஜிஎஸ்டி அறிமுகமான பின்னர், உள்ளாடை, கைத்தறி போன்ற இன்னும் பல ஆடை தயாரிக்கும் நிறுவனங்கள் ஆழமான நெருக்கடியில் சிக்கியிருக்கின்றன. பெரும் எண்ணிக்கையில் பெண்கள் வேலை பார்க்கும் இந்த நிறுவனங்கள் தொடர்ச்சியான இழப்பைச் சந்தித்ததால், வேறு வழியின்றி பலரை நிரந்தரமாக வேலையை விட்டு நீக்கியுள்ளது. அவை இயந்திர உற்பத்தியினால் மலிவாக விற்கப்படும் பொருட்களுடன் போட்டியிட்டு நிலைத்திட முடியாமல் ஏற்கனவே தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில் ஜிஎஸ்டியின் கூடுதல் சுமையால் சுயதொழில் பார்க்கும் கைவினைத் தொழிலாளர்கள் பேரழிவிற்குள்ளானார்கள். வயதுடைய தொழிலாளர்களில் 93சதவீதத்தினர் குழுமமாக்கப்படாத, அமைப்புச் சாரா நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். இதில் பாதிக்கும் சற்று மேற்பட்டவர்கள் சுயதொழில் பார்ப்பவர்களாகும்.

பலர் அரைகுறை படிப்பு கொண்டவர்கள் அல்லது படிப்பறிவற்றவர்கள். கிட்டத்தட்ட 1.1 கோடியாக இருக்கும் கைவினைஞர்களில் 43 லட்சம் பேர் கைத்தறித் துறையைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். இந்த 1.1 கோடித் தொழிலாளர்கள் அமைப்பு ரீதியிலான அமைப்புசார் தனியார் துறையில் பணிபுரிபவர்களைப்போல் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட சமமே. விவசாயத்துறை அடுத்த படியாக இதுதான் நாட்டில் வேலை தரும் இரண்டாவது பெரிய துறையாகும். ஜிஎஸ்டி வந்தபின் இப்போது குறைந்தபட்ச தேவைவைக் கூட பூர்த்திசெய்ய முடியாமலிருக்கும் இந்த பெரும் எண்ணிக்கையிலான மக்கள் திரளின் உயிர்வாழ்வும் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகி விட்டது. நன்கு உற்றுநோக்கிப் பார்த்தோமேயானால், ஜிஎஸ்டியினால் பயனடைந்தவர்கள் பெரிய தொழிற் குடும்பங்கள், பகாசுர பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் மிகப்பெரும் கார்ப்பொரேட் நிறுவனங்கள் தான் என்பது தெரியவரும். ஏனெனில் அவைகள் தான், வாங்கும் உள்ளீடுகள் விலையில் ஆதாயம் அடைந்துகொண்டு, சிறு நிறுவனங்களிடமிருந்து வரும் வியாபாரப் போட்டியை முழுமையாக முறியடித்திட அவைகளுக்கு ஜிஎஸ்டி வசதியான ஒன்றாக அமைந்துவிட்டது. அல்லது சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மீது குறைந்த பட்சம் நெருக்கடியாவது தர முடிகின்றது. இறுதியாக, இது ஒரு மறைமுக வரியாக இருப்பதால், தற்போதிருக்கும் செயல்முறைப்போக்கு போல ஜிஎஸ்டி வரிச்சுமையானது கடைசியில் நுகர்வோர் மீதுதான் விழும். அனைத்து தினசரித் தேவைப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்திருப்பது இதற்குச் சான்றாகும்.

ஆக, சிறு வணிகர்கள், மாதச் சம்பளம் வங்குவோர், தினக்கூலி வாங்குவோர் மற்றும் ஏழை விவசாயிகள் உள்ளிட்ட பாடுபடும் மக்கள்திரளின் அனைத்துப் பிரிவினரும் ஜிஎஸ்டியினால் மட்டுமின்றி 'பணமதிப்பு நீக்க வரலாற்றுச் சிறப்புமிக்க துவக்கத்தின்' விளைவாக அடுக்கடுக்காக ஏற்பட்ட கடும் துயரங்களை வார்த்தைகளில் வெளிப்படுத்த இயலாமல் கடந்த ஒரு வருடமாகத் தவித்து வருகின்றனர். விரக்தியுடன் செய்வதறியாது சோர்வுற்றிருக்கும் மக்களை சமாதானப்படுத்தும் முயற்சியாக, குறிப்பாக வரவிருக்கும் குஜராத் சட்டசபைத் தேர்தலுக்கு முன்பாக, விலைவாசியைக் குறைத்துவிடும் என்பதுபோல, அரசாங்கமானது தெளிவாக 210 பொருட்களுக்கு ஜிஎஸ்டி வரிவிகிதத்தைக் குறைத்திருக்கிறது. இது மற்றுமொரு பகட்டான ஏமாற்றுச் சொல்விளையாட்டு. இந்த வரிக் குறைப்பு ஆரவாரமாகப் பேசப்பட்ட "பிரச்சினையற்ற வியாபாரத்திற்கு" உதவிடலாம். ஆனால், இது நிச்சயம் ஒருபோதும் நுகர்வோருக்கு விலைவாசியைக் குறைத்திடாது. ஆனால் நம் பிரதமரோ "ஜிஎஸ்டி அறிமுகத்தினால் ஏற்பட்டிருக்கும் அதிகரிக்கும் போட்டியானது விலைவாசியை மட்டுப்படுத்தப்போகின்றது, இது ஏழை மற்றும் நடுத்தர வர்க்க நுகர்வோருக்கு நேரடியாகப் பயன்தரப்போகின்றது" என்றும் "மக்களின் தேவைப் பொருட்களின் விலையை மலிவாக்கி விட்டது" என்றும் தனது "மன் கி பாத்" என்றழைக்கப்படும் தொலைகாட்சிப் பரப்புரையில் பிதற்றிகொண்டிருக்கின்றார்.

## பொருளாதாரம் அந்தரத்தில் ஊசலாடிக்கொண்டிருக்கின்றது, வறுமையும் துயரமும் அதிகரித்துக்கொண்டிருக்கின்றது

இருந்தபோதிலும், பிரதமரின் மற்றும் அவரது கட்சி சகாக்களின் கூற்றுக்களை மறுதலிக்கும் விதமாக, உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் (GDP growth rate) தொடர்ந்து சரிந்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்துகொண்டிருக்கிறது. பொது நிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவன அறிக்கையின்படி பணமதிப்பு நீக்கம் மற்றும் ஜிஎஸ்டி ஆகியன அறிமுகப்படுத்தியதன் பின்னர், பொருளாதார இழப்பென்பது கிட்டத்தட்ட 12 லட்சம் கோடி ரூபாய்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதைக்கண்டு பயந்துபோய், நீண்ட கால அடிப்படையில் இந்தியா வளர்ந்து முன்னேறும் என்கின்ற நம்பிக்கை நற்சான்றை வழங்கிட வேண்டும் எனக்கோரி பாஜக அரசாங்கம் இப்போது ஏகாதிபத்திய சக்திகளின் சர்வதேசிய அமைப்பான சர்வதேச நிதியமைப்பு மற்றும் உலக வங்கியின் கதவுகளைத் தட்டிக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, ஏகாதிபத்திய–முதலாளித்துவ வர்க்கத்தின் நலனுக்குச் எப்படியாவது சேவை செய்து பாதுகாக்க வேண்டும் என்ற வேலையைச் செய்கின்ற சர்வதேச மதிப்பீடு செய்யும் மூடிஸ் (Moody's) என்கின்ற நிறுவனம், கடன் மதிப்புகளில் (இதன் பொருள் வெளிநாட்டுக்கடன் வாங்கி திருப்பிச்செலுத்தும் தகுதியை இந்திய அரசாங்கம் கொண்டிருப்பதால் இதற்குக் கடன் வழங்குவது பாதுகாப்பானது என்பதாகும்) இந்தியா போதிய அளவு முன்னேற்றமடைந்துள்ளது என்பதுபோன்ற அறிவிப்பைத்தந்து பாஜக அரசாங்கத்தைக் காப்பாற்றிட முயற்சித்தது. பொருளாதாரம் எவ்வாறு உறுதியாக இருக்கின்றது என்று நிருபிப்பதற்காக இத்தகைய அறிவிப்பு முன்னிறுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது.

சாமானிய மக்களின் பொருளாதார ஆரோக்கியம் இதுவல்ல, ஆனால் தெளிவாகப் பார்த்தோமேயானால், அரசாங்கம் கடனைத் திருப்பிச்செலுத்தும் தகுதியானது பொருளாதார நிலைத்தன்மைக்கான ஆதாரமென முன்னிறுத்தப்படுகிறது. அரசாங்கம் அதிகமாகக் கடன் வாங்குவது என்பதன் பொருள் கடன் வழங்குபவர்களிடம் இந்தியாவை மேலும் மேலும் அடமானம் வைத்திடுவதாகும். ஆக, "நாட்டை விற்கவில்லை" எனப் பிரதமர் கூறுவதை, உண்மையென எடுத்துக்கொள்ள முடியுமா?. இதைவிட வேறென்ன கேலிக்கூத்தானது! ஆனால், மூடிஸ் அமைப்பின் அறிவிப்புக்கு மாறாக, ஸ்டாண்டர்டு அன் புவர் (STANDARD AND POOR) என்கின்ற மற்றொரு சர்வதேச மதிப்பீட்டு அமைப்பானது மிகக்குறைவான முதலீட்டுத் தரத்தைக்கொண்ட நாடு இந்தியா என்பதை மாற்றாமல் அப்படியே வைத்திருக்கிறது. இந்திய அரசாங்கம் ஆளும் ஏகபோகங்களின் நலனுக்காக தற்கொலைக்குச் சமமான கொள்கைகளை எடுத்து வருவதால் அது எந்த அளவிற்கு திவாலாகிப் போவதை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது என்பது குறித்து ஏகாதிபத்திய உலகின் அமைப்புகளுக்கு மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதையே இது காட்டுகிறது. பொருளாதாரவாதிகள்–கட்டுரையாளர்கள் வகிக்கும் பாத்திரம் மிகவும் கவலையளிக்கக்கூடியதாக உள்ளது. அவர்கள் அரசாங்கத்திடம் தங்களை முழுவதுமாக விற்று விட்டதால், பேரழிவை ஏற்படுத்தக்கூடிய கொள்கைகளிலிருந்து 'நம்பிக்கையளிக்கும்' அம்சங்களைக் கண்டுபிடிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டும், மனத்தாங்கல் கொண்டிருப்பவர்களிடம் 'நீண்டகால' பயன்கள் கிடைக்கும் என்ற, தந்திரமாக உற்பத்திசெய்யப்பட்ட மற்றும் பொருத்தமாக உச்சரிக்கப்படும் 'ஆணித்தரமான மறுக்கமுடியாத' ஆதாரங்களை வழங்கிக்கொண்டுமிருக்கின்றனர்.

## அதிகரித்துவரும் வகுப்புவாத, ஜாதீயவாத, குறுகியவாத, பிரிவினைவாதத் தாக்குதல்

பிரதமரின் மற்றும் அவரோடு இணைந்திருப்பவர்களின் இதுபோன்ற தகிடுதத்தங்களும் பகட்டான பேச்சுக்களும் மற்றும் அவர்கள் வெறுப்பூட்டும் வகையில் போலியான நம்பிக்கையை தருவதில் ஈடுபட்டுவருவது, நீண்ட நாட்கள் மக்களை மௌனமாக வைத்திருக்காது என்பது ஆளும் வர்க்கத்திற்கும் அதற்குச் சேவகம் புரியும் பாஜக அரசாங்கத்திற்கும் தெரியும். வாழ்க்கை அனுபவம் அவர்களைப் போராட்டப் பாதையைக்குக் கொண்டு வந்துவிடும். அத்தகைய போராட்டமானது ஒரு ஒன்றுபட்ட உணர்வுபூர்வ வகையில், இருக்கின்ற, அமைப்பிற்கெதிரான கிளர்ச்சியா சரியாகத் திருப்பி விடப்படுமேயானால், ஒட்டு மொத்த முதலாளித்துவ அமைப்பு நிச்சயம் ஆபத்திற்குள்ளாகிவிடும். எனவே, வகுப்பு வாதம், ஜாதீயவாதம், இனவாதம் போன்றவற்றைத் தூண்டிவிட்டு பாடுபடும் மக்களின் ஒற்றுமையைக் குலைத்திட, கூடவே தந்திரவலை பின்னப்பட்டும், மதவெறிவாதம், குருட்டுத்தனம், பழைமைவாதம், சகிப்புத்தன்மையின்மையும் மற்றும் அனைத்துவகை பகுத்தறிவின்மையையும் இடைவிடாது பரப்பிவருவதன் மூலம், அவர்களின் சிந்தனைச் செயல்முறைப்போக்கு, காரணகாரியமறியும் தன்மை மழுங்கடிக்கப்பட்டும், மற்றும் பொதுவான நலன் மற்றும் பிரச்சினையை முன்வைத்து அவர்கள் ஒன்றுகூடும் வாய்ப்பு இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படுகிறது. ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் கட்டளைக்கிணங்க, ஆளும் ஆர்எஸ்எஸ், பாஜக மற்றும் அவைகளின் சங்கப் பரிவாரக் கூட்டங்கள் இத்தகைய பிளவுவாதத்தில், ஒற்றுமையின்மையில், சகிப்புத்தன்மையின்மையில், பரஸ்பர நம்பிக்கையின்மையில் மற்றும் வெறுப்புணர்வில் மக்களை மூழ்கடித்திட அவைகளின் ஒட்டுமொத்தப் படைக்கலனையும் அணிவகுத்து நிறுத்தியிருக்கின்றன.

பணமதிப்பு நீக்கம் மற்றும் ஜிஎஸ்டி போன்ற தொடர்ச்சியான காட்டுமிராண்டித்தன பொருளாதாரத் தாக்குதல்களால் முதுகொடிந்து கிடக்கும் பாடுபடும் மக்களை ஆளும் சக்திகள் சகோதரத்துவ ரத்த வெள்ளத்தில் ஆழ்த்தியும் ஜாதீய மதவாதச் சண்டைகள் மற்றும் இதுபோன்ற பிற உட்பகை மோதல்களில் ஈடுபடவைத்தும் வருகின்றனர். மதரீதியிலான பதற்றம், தலித் படுகொலை, ஆணவக்கொலை மற்றும் சிறுபான்மை மதத்தினர் மீதான அடக்குமுறை போன்ற பத்திரிகைச் செய்திகள் ஒவ்வொரு நாளும் அடுக்கடுக்காக வந்துகொண்டேயிருக்கின்றன. அனைத்து மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கும் எதிராக உணர்வு ரீதியிலான ஏதாவது ஒரு எதிர்ப்பியக்கத்தில் இறங்கத் துணிந்தாலோ மற்றும் தர்க்கரீதியில் சிந்திக்கும் எண்ணத்தை வளர்த்தாலோ கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என மக்களை அச்சுறுத்துவதற்காக பகுத்தறிவாளர்கள் திட்டமிட்டு படுகொலை செய்யப்படுகின்றனர். பல சம்பவங்களில், ஆர்எஸ்எஸ், பாஜக மற்றும் அவர்களைச் சேர்ந்த வெறிகொண்ட ஆயுதம் தாங்கிய கைக்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# வர்க்க மற்றும் வெகுஜன இயக்கங்களை வலுப்படுத்துவதன் மூலம் பாசிசத் தாக்குதலை முறியடிப்போம்

6ம் பக்கத் தொடர்ச்சி

கூலிகள் அத்தகைய கொடூரமான குற்றங்களைச் செய்துகொண்டும் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டும் வருகின்றனர்.

கடுமையான பொருளாதாரத் தாக்குதலால் நாட்டு மக்கள் ஒட்ட உறிஞ்சப்பட்டுக்கொண்டு அவர்கள் உயிர் வாழ்ந்திடுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் வேளையில், ஆளும் ஆர்எஸ்எஸ், பாஜக, அவைகளின் தலைவர்கள் மற்றும் அரசாங்கம் அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது, பொதுமக்கள் பணத்தைப் பொறுப்பற்று செலவு செய்து சரயு நதியின் கரைகளில் ஒரு லட்சம் விளக்குகளை எரியவிட்டு 'நவமி கங்கை' 'நவமி பிரம்மபுத்திரா' திருவிழாக்களை நடத்தும் திட்டங்களை கையிலெடுத்திருக்கின்றனர். இது போன்றே, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை செலவிட்டு சத்ரபதி சிவாஜி மற்றும் சர்தார் படேல் ஆகியோரின் நூறு அடி உயரச் சிலையை நிறுவிக் கொண்டும், மலைக்கவைக்கும் 1700 லட்சம் கோடி டாலர்கள் செலவுசெய்து மும்பைக்கும் அகமதாபாத் திற்குமிடையில் புல்லட் ரயில் விடுவதற்குச் செலவுசெய்துகொண்டும் இருக்கின்றனர். இது எவருடைய பணம்? இது மக்கள் பணமில்லையா? மக்கள் படும் துயரங்களைத் தணிப்பதற்கு அது செலவிடப்படாமல், தேவையற்ற அனைத்துவகை ஆக்கபூர்வமற்ற செயல்களில் அப்பணம் வீணடிக்கப் படுகிறது. நியாயமாக எழக்கூடிய கேள்வி எதுவெனில், ராமர் கோயில் கட்டுவது அல்லது விண்ணை முட்டும் சிலைகளை நிறுவுவது மக்களின் பெருகிக்கொண்டிருக்கும் இடர்பாட்டிலிருந்தும் வறுமையிலிருந்தும் ஏதாவது நிவாரணம் தருமா? இவைகள் பேரழிவுமிக்க பொருளாதார மற்றும் நிதிக்கொள்கைகளால் ஏற்படும் சீரழிவுகளைத் துடைத்தெறியுமா? இதேபோன்று, இப்போது பசுப்பாதுகாப்பு போன்ற வகுப்புவாதத்தைத் தூண்டுகின்ற பிரச்சினைகளை முன்னிறுத்துவது தான் ஆர்எஸ்எஸ், பாஜகவின் பிரதான சமுதாயக் கடமையாக உள்ளது. தலையில் காவி நிற கட்டுப் போட்டுக்கொண்டவர்கள் யாவரும் கொடூரமாகத் தாக்கிடவும் அல்லது தாய்ப்பசுவை 'அவமதித்து விட்டார்' என அவர் நினைக்கும் எவரையும் ஈவிரக்மின்றி கொல்லவும் இப்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் மானபங்கப்படுத்தப்படும்போதும், கற்பழிப்புகள் நடைபெறும்போதும், கூட்டு வன்புணர்வுகள் அச்சுறுத்தும் வகையில் அதிகரித்துக்கொண்டிருக்கும்போதும், பெண் சிசுக்கொலை மற்றும் பெண் குழந்தைள் கொல்லப் படுவது அபாயகரமாக உயர்ந்துகொண்டிருக்கும் போதும், வரதட்சணை சாவுகள் எல்லையில்லா மல் அதிரித்துக்கொண்டிருக்கும்போதும் 'தாய்ப்பசுவை வணங்கிடும்' இவர்கள்தான் குறிப்பாக மௌனமாகக் காணப்படுகிறார்கள். மதவாதக் குருட்டுத்தனத்தைத் தூண்டிவிடுவதும் சிறுபான்மை மதத்தினருக்கு எதிராக, குறிப்பாக முஸ்லீம்களுக்கு எதிராக நஞ்சை உமிழ்வதும், இந்துத்துவப் புகழ்பாடுவதும்தான் ஆர்எஸ்எஸ், பாஜகவினரின் பிற முதன்மையான பணிகளாகும்.

இந்துத்துவத்தின் புகழ்பாடிடவும், பிறரைத் தாக்கிடவும், 'ராம ராஜ்ஜியத்தை' நிறுவிடவும் முற்பட்டுள்ள ஆர்எஸ்எஸ், பாஜகவின் திட்டமான இந்த 'சுத்திகரன்' திட்டத்தை (நாட்டை தூய்மைப் படுத்தும் திட்டம்) எதிர்க்கத் துணிந்த எவரையும் சிரச்சேதம் செய்திடவும் ஓர் ஆயுதம் தாங்கிய காவியுடையணிந்த அதிரடிப்படையினர் இப்போது ஏவிவிடப்பட்டிருக்கின்றனர். மூர்க்கத்தனத்தையும் வெறித்தனத்தையும் வளர்க்கக்கூடிய, பழைமைவாத சிந்தனைகளையும் சமயக்கோட்பாடுகளையும் தூண்டி விடக் கூடிய, மக்களின் ஒரு பிரிவினருக்கெதிராக மற்றொரு பிரிவினருடன் மோதலைத் தூண்டி விடக்கூடிய இத்தகைய தந்திரமாக வடிவமைக்க பட்ட திட்டமானது, ஆளும் பூர்ஷ்வாக்களின் கொடிய வர்க்க நலனை முன்னிட்டு பாடுபடும் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்காகக் கொண்டுவரப் பட்டதேயன்றி வேறெதற்காகவுமல்ல. அனைத்துத் துயரங்களுக்கும் வேதனைகளுக்கும் ஆணிவேராக இருப்பது முற்றிலும் ஊழலாகிப்போன மரணத் தருவாயிலிருக்கும் ஒடுக்குமுறை முதலாளித்துவ அமைப்பே என்பதை துயருற்றுக்கொண்டிருக்கும் கோடானகோடி மக்களிடமிருந்து மறைத்து கவனத்தைத் இது திசைதிருப்பி விடுகிறது. இவ்வாறாக அது மக்களை மனிதத்தன்மையற்ற வர்களாக்கி, அவர்களைத் தார்மீக ரீதியில் முது கெலும்பற்றவர்களாக்கி, சிந்திக்கும் திறனே அற்றவர்களாக்கிவிடுகிறது. ஆக, இது மனித இனத்தின் மீதும், மனித சாராம்சத்தின் மீதும், மெல்லிய மனிதப் பண்புகள் மற்றும் சகமனித உணர்வு மீதும் தொடுக்கப்பட்ட மற்றுமொரு மரண அடியாகும். ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நிற்கும் ஆர்எஸ்எஸ், பாஜகவினருக்கு மக்களை மிகவும் மனிதத்தன்மை யற்றவர்களாக ஆகவில்லையெனில், அவர்களை ஆட்சி செய்திட முடியாது என்பது தெரியும். அதனால்தான் இத்தகைய நயவஞ்சகத் திட்டம்.

மேலும், தவறான கொள்கைகளை விமர்சனம் செய்வதற்கும் உண்மையைக் கூறுவதற்கும் எவருக்கும் உரிமையில்லை. உண்மைக்காக நின்று, கட்டுக்கதைகளை ஏற்காமல் அதற்கான உறுதியான ஆதாரத்தை ஒருவர் வேண்டுவாரானால், அவர் தேசவிரோதி என முத்திரை குத்தப்படுவார். பாஜக அரசாங்கத்தின் மீது வைக்கப்படும் எந்த விமர்சனமும் அது பிரதம மந்திரிக்கு எதிரான அனுமதிக்க முடியாத குற்றம் என ஓரங்கட்டப் படுவது மட்டுமின்றி, அது தண்டனைக்குரிய தாகவும்கூட ஆகிவிடுகிறது. உண்மையில், அரசாங் கமும், ஆளும் கட்சியும் அதன் தலைவர்களும் முன்வைக்கின்ற கட்டுக்கதைகளை நம்பவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இல்லையெனில், அது தேசப்பற்றின்மை எனச் சாயம் பூசப்பட்டு, தேசத்து ரோகத்துக்கு இணையானது என முடிவு செய்யப்படும்.

## ஒடுக்குமுறை முதலாளித்துவத்தின் இந்த இருமுனைத் தாக்குதலை முறியடிப்போம்

ஆக, இது ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் மற்றும் அதன் சேவகர்களின் ஒரு இருமுனைத் தாக்குதலாகும். ஒருபுறம் காட்டுமிராண்டித்தன மான பொருளாதாரத் தாக்குதல், எதிர்ப்புக் குரலை நசுக்குதல், மனித மற்றும் ஜனநாயக உரிமை களைத் தடை செய்தல் நடைபெற்றுக்கொண்டும், மற்றொரு புறம் மக்களின் சிந்திக்கும் திறனைப் பறிப்பதற்கும் மனித சாராம்சத்தை அகற்றுவதற்கு மான நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டும் இருக்கிறது. அத்துடன், பல்வேறு வடிவத்திலான பொய்களும் ஏமாற்றுத்தனமும் செய்யப்படுகிறது. இனிமையான வார்த்தைகளைக் கூறி ஆசை காட்டப்பட்டு உரத்த குரலிலான வாக்குறுதிகளும் தரப்படுகின்றன. கூடவே மிருகத்தனமான ஒடுக்கு முறையும் அடக்குமுறையும் துன்புறுத்தலும் மேற்கொள்ளப்படுகிறது. இது வரவிருக்கும் பாசிசத்தை நினைவுபடுத்துகிறது.

வரவிருக்கும் ஆபத்து குறித்து ஒடுக்கப்படும் மக்கள் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். ஆர்எஸ்எஸ், பாஜகவின் வலையில் அவர்கள் வீழ்ந்திடக்கூடாது. அவர்களது பாசிசத் தாக்குதல்கள் யாவும் முழுபலம் கொண்டு முறியடிக்கப்பட்டாக வேண்டும். அனைத்துத்தரப்பு பாடுபடும் மக்களும் அனைத்துப் பிரிவினைவாத சிந்தனையிலிருந்து விடுபட்டு, வாழ்வின் எரியும் பிரச்சினைகளுக் கான சக்தி வாய்ந்த, பொதுநலனை முன்னிறுத்திய வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங்களை கட்டிடும் உயரிய புரட்சிகரக் சித்தாந்தத்தை அடிப்படையாகக்கொண்ட சரியான புரட்சிகர சக்தியினால் தலைமை தாங்கி நடத்தப்படும் அத்தகைய தீவிர போராட்டங்கள் வாயிலாகத்தான் இது சாத்தியப்படும். கூடவே, பகுத்தறிவில்லாத குருட்டு சிந்தனைகளை கண்மூடித்தனமாகப் பின்பற்றிட, ஆர்எஸ்எஸ், பாஜக உருவாக்கி வளர்த்துக்கொண்டிருக்கும் நாசகர சிந்தனைகளை தோற்கடிக்கும் விதத்தில் தீவிர சித்தாந்தப் போராட்டத்தை கட்டவிழ்த்துவிட வேண்டும். இவ்விரண்டு மிக முக்கியக் கடமையை நிறைவேற்றுவதை சற்றே உதாசீனப்படுத்தினாலும் கூட, முதலாளித்துவத்தின் மேலே விளக்கப்பட்ட இருமுனைத் தாக்குதல் என்பது நிச்சயம் தீவிரமாகிவிடும் ■

# உச்சநீதிமன்ற நான்கு நீதிபதிகள் வெளிப்படுத்தியிருக்கும் ஆதங்கம், உயர்மட்ட நீதித்துறை என்றுமில்லாதவாறு நெருக்கடியில் சிக்கியிருக்கிறது என்பதையே காண்பிக்கிறதென எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கருதுகிறது

*எஸ்யுசிஐ ( கம்யூனிஸ்ட் ) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 13.01.2018 அன்று விடுத்துள்ள அறிக்கை :–*

அவசர அவசரமாக ஏற்பாடு செய்த ஒரு செய்தியாளர்கள் கூட்டத்தில், உச்சநீதிமன்ற நிர்வாகத்தில் கடுமையான குறைபாடுகளும், முறைகேடுகளும் தலையீடுகளும் உள்ளன என்பதை வெளிப்படுத்தியுடன் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தான் விரும்பும் இளைய நீதிபதி களுக்கு முக்கியமான வழக்குகளைத் ஒதுக்கித்தரு கிறார் என்ற கடுமையான குற்றச்சாட்டை உச்ச நீதிமன்றத்தின் நான்கு நீதிபதிகள் கொண்டு வந்துள்ளனர். ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் இது அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. நீதிபதி பிஜி லோயாவின் மர்ம மரணம் குறித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என பத்திரிகையாளர் பிஆர் லோனே தொடுத்துள்ள வழக்கை நீக்கிட உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி மறுத்தது குறித்த அவர்களின் கடிதத்திற்கு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி இன்னும் பதிலளிக்கவில்லை என்ற மற்று மொரு குற்றச்சாட்டையும்கூட மனத்தாங்கல் கொண்ட அந்த நான்கு நீதிபதிகளும் முன்வைத் துள்ளனர். பிஆர் லோனே உச்சநீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கின் நோக்கமானது இதே பிரச்சினைக்காக பம்பாய் வழக்கறிஞர்கள் சங்கம் ஏற்கனவே சமர்ப்பித்துள்ள மனுவின் மீதான விசாரணையை தடுத்து நிறுத்துவதாகும் என பம்பாய் வழக்கறிஞர்கள் சங்கம் குற்றம் சாட்டி யிருப்பதைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். பாஜகவின் தலைவர் அமித் ஷாவும் குற்றவாளி களில் ஒருவராகச் சேர்க்கப்பட்ட ஒரு போலி என்கவுண்டர் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் நீதிபதி லோயா விசாரணை செய்துகொண்டிருந்தார். அவரது மரணம் இயற்கையானதல்ல எனவும் பாஜக தலைவருக்கு சாதகமான தீர்ப்பு வழங்கிட 100 கோடி ரூபாய் லஞ்சம் தர முன்வந்த பின்னர் அவரது மரணம் நடந்திருப்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

நீதிபதிகள் நியமன கொலீஜிய முறை ஒரு சுயநலக்கும்பல்கூட்டம் போல செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது எனவும் மனத்தாங்கல் கொண்ட நீதிபதிகள் குற்றம் சாட்டியிருக்கின்றனர். கொலீஜியத்தின் உறுப்பினர்கள் மத்தியில் லஞ்சம் பரஸ்பரம் அனுகூலம் செய்யும் முறை என்பது இருந்துகொண்டிருக்கிறது என்றும் அவர்கள் கூறுகின்றனர். வெளிவந்துள்ள அதிர்ச்சிதரும் இத்தகைய அனைத்தையும் கண்டு ஒட்டுமொத்த நாடும் ஆடிப்போயிருக்கின்றது. எப்படியும் இறுதியில் நீதி கிட்டிவிடும் என மக்கள் எதிர்பார்க்கும் நீதித்துறையே, நீதி தவறிவிட்டதெனக் காட்டும் இத்தகைய கவலைதரும் சர்ச்சைகளில் சிக்கியிருக்கு மானால், சீரழிந்துபோன மரணத்தருவாயிலிருக்கும் முதலாளித்துவத்தில் மக்கள் ஏதாவது எதிர்பார்த்திடமுடியுமா?

இவ்வாறாக, பொருளாதாரம், அரசியல், கலாச்சாரம் உள்ளிட்ட வாழ்க்கையின் ஒவ்வொரு களத்திலும் அபாயகரமாக அதிகரித்துவரும் தார்மீக, நெறிமுறை மற்றும் ஜனநாயக மதிப்புக்களின் சீரழிவிலிருந்து நீதித்துறை விடுபட்டிருக்கவே வில்லை என்பதை இது மீண்டுமொருமுறை வெளிப் படுத்தியிருக்கிறது. நீதிபரிபாலன அமைப்பின் இந்த சீரழிவைத் தடுத்து நிறுத்திட, நீதிபரிபாலன செயல்முறைப்போக்கை சிதைத்திடும் இத்தகைய போக்கிற்கு எதிரான, சக்திவாய்ந்த, ஒன்றுபட்ட மக்கள் அபிப்பிராயத்தை உடனடியான வளர்த்தெடுப்பது முக்கியக்கடமையாகும். நீதித் துறையை இவ்வாறு ஓரங்கட்டப்படுவதற்கு எதிராக ஒன்றுபட்ட மக்கள் எதிர்ப்பு அழுத்தத்தை உறுதிப் படத்தெரிவிக்கும் கடமையைக் கையிலெடுக்க நாட்டு மக்கள் முன்வரவேண்டும் என அறைகூவல் விடுக்கிறோம் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# ஆண்டு முழுவதும் நடைபெற்ற நவம்பர் புரட்சி கொண்டாட்டத்தின் நிறைவு விழா கலை நிகழ்ச்சிகள்

கல்கத்தா நகரின் வெலிங்கடன் நாற்சாலை சந்திப்பிற்கு அருகேயுள்ள சுபோத் மல்லிக் சதுக்கம் நவம்பர் 18, 2017 அன்று காலை முதலாகவே நிரம்பத் துவங்கியது.

1917 நவம்பரில் ருஷ்யாவில் ஆஹாவென்றெழுந்த புரட்சியின் நூற்றாண்டின் நிறைவு விழாவின் இறுதி நிகழ்வான கலை நிகழ்ச்சிகள் இந்த சதுக்கத்தில்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. எமது கட்சியின் மாநிலத் தலைமைகளின் சீர்மிகு வழிகாட்டுதலில் பல்வேறு கலைக்குழுக்கள் தயாரித்திருந்த பலவகைப்பட்ட கலை நிகழ்ச்சி களைக் காண அக்கலைக்குழுவினரும் பொது மக்களும் அச்சதுக்கத்தில் திரண்டனர். காலை பத்து மணிக்கு நிகழ்ச்சி துவங்குவதாக தொகுப்பாளர் அறிவித்து மேடையின் திரை விலகியபோது எள் விழ இடமில்லாமல் அரங்கம் நிரம்பி வழிந்தது.

அடுத்தடுத்து வானவில்கள் தோன்றினால் வானம் எவ்வளவு அழகாகவும் காணக்கண் கொள்ளாக் காட்சியாகவும் இருக்குமோ அதுபோன்று ஒன்றன் பின் ஒன்றாக பல்வேறு மாநிலங்களிலிருந்து கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன.

ஆந்திர, தெலுங்கானா மாநிலங்களின் கலைக்குழுக்கள் வழங்கிய நாடகத்தோடு நிகழ்ச்சி துவங்கியது. ரஷ்யாவில் 1905ம் ஆண்டு தோல்வியில் முடிவுற்ற புரட்சியின் “கருப்பு ஞாயிறு”ல் துவங்கி, 1917ம் ஆண்டு பிப்ரவரி புரட்சியும் அதைத் தொடர்ந்து அமைந்த முதலாளித்துவ ஆட்சியும் அதன் பிறகு நடைபெற்ற நவம்பர் புரட்சியின் வெற்றி வரை அந்நாடகம் மிக நேர்த்தியான முறையில் கடந்த நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகால ரஷ்யாவின் வரலாற்றை நம் கண் முன்னே நிறுத்தியது. அதைத் தொடர்ந்து அவர்கள் சுந்தரத் தெலுங்கில் பாடல்களும் இசைத்தனர். அடுத்து, அஸ்ஸாம் மாநிலத்தார் பாரம்பரிய நடனமான பிஹூ நடனத்தின் மூலம் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெல்லற்கரிய தன்மையை அழகுற வெளிப்படுத்தினர். தொடர்ந்து வந்த பீஹார் மாநில கலைஞர்கள் குழு நடனத்தால் பார்வையாளர்களை கவர்ந்தனர். புரட்சிகர உணர்வூட்டும் பாடல்களை கம்பீரமாக இசைத்த தில்லி இசைக்குழுவினரைத் தொடர்ந்து, ஜார்க்கண்ட் கலைக்குழுவினர் சந்தால் பழங்குடியின குழு நடனத்தால் அனைவரையும் கவர்ந்து மனவெழுச்சியுறச் செய்தனர்.

இரண்டாம் உலகப்போரின் போது முறையான இராணுவத்தினர் அல்லாது கம்யூனிஸ்ட் கட்சியால் வார்க்கப்பட்ட வீரர்கள் செம்படைக்கு உதவியாக பல வீரதீர செயல்கள் புரிந்தனர். அத்தகைய உண்மை நிகழ்வொன்றை நாடகமாக்கி புரட்சிகர உணர்வால் பார்வையாளர்களின் நாடி நரம்பு களை முறுக்கேறவைத்தனர் கர்நாடகத்து நாடகக் குழுவினர். அதைத் தொடர்ந்து, மலையாளத்து தீம்பலாவை தேனோடிணைத்து உண்டால் ஏற்படும் தீஞ்சுவையை ஒத்த பாடல்களை கேரளத்து இசைக்குழுவினர் இசைத்தனர். மஹாராஷ்டிராவிலிருந்து சில பாடல்களை இன்னிசைத்தபின் மத்தியப் பிரதேசத்திலிருந்து மத நல்லிணக்கத்தின் தேவையை வலியுறுத்தும் நாடகம் ஒன்றை அரங்கேற்றினர். பின்னர் மேடையேறிய ஒடிசா கலைக்குழுவினர் அனைவர் சிந்தையையும் குவிக்கும் வகையில் நடத்திய நாடகத்தில் சோசலிசத்தின் வீழ்ச்சிக்குப்பின் ரஷ்யாவில் அரசியல்–பொருளாதார–கலாச்சார துறைகளில் நிலவும் சீரழிவைக் கண்டு மனம் பேதலித்துப் போன ஒருவர் ஸ்டாலினை தூக்கியெறிந்ததாலேயே இந்த அவல நிலை என்பதை உணர்ந்து மீண்டும் ஸ்டாலின் பதாகையை ஏந்திட மக்கள் திரண்டெழுந்து மீண்டும் ஒரு சோசலிசப் புரட்சிக்கு தயாராவதாக மிகுந்த உணர்வு பூர்வமாக நடித்துக்காட்டினர். ராஜஸ்தானிலிருந்து வந்தவர்கள் கம்பீரமாக இசைத்த சில பாடல் களுக்குப்பிறகு, தமிழ்நாட்டிலிருந்து இரண்டு நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. முதலாவதாக, போராட்டம் என்ற தலைப்பிலான நாடகத்தில் தொழிலாளர்களை அணிதிரட்டியதால் போலீசாரின் அடக்குமுறைக்கு ஆளான தொழிற்சங்க தலைவரின் பிள்ளைகள் அடுத்த தலைமுறை போராட்டத்தை தொடர்வதற்கு உத்வேகம் கொள்கின்றனர் என்ற கருத்தை உணர்த்துவதாக வும், மற்றொரு நாடகமான “மோடி மஸ்தான்” என்ற நாடகம் தற்போதைய ஆளுங்கட்சிகளின் மக்கள் விரோத கொள்கைகளை ஹாஸ்யத்துடன் வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தன. சிக்கிம் மற்றும் உத்ராகண்ட் மாநிலங்களின் இசைக் குழுவினர் இமயமலையின் குளுமை தழுவுவது போன்ற உணர்வைத் தருகின்ற வெகுஜன பாடல்களை இசைத்தனர். மேற்கு வங்கத்தின் தன்னிகரில்லா கலைக்குழுவினர் அற்புதமான இன்னிசை பாடல்களாலும் மைம் என்ற வகையைச் சேர்ந்த நாடகம் ஒன்றாலும் அரங்கத்தாருக்கு சமூக உணர்வூட்டினர்.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக பங்களாதேசத் திலிருந்து வந்திருந்த தோழமை அமைப்பு கலைக்குழுவினர் பரவசமூட்டும் இன்னிசை பாடல்களால் அரங்கத்தாரை கட்டிப்போட்டனர்.

ஸ்வரங்களாக முறைப்படுத்தப்பட்ட ஒலி அலைகள் ஒருங்கிணைந்து ஒத்திசைவு பெற்று இராகங்களாக தவழ்ந்து இனிமை சேர்ப்பதுபோல நுண்ணிய நயமும் அற்புதமான பிணைப்பும் சமூக உணர்வின் பண்புக்கூறுகளும் ஒருங்கிணைந்து இக்கலைநிகழ்ச்சிக்கு காலத்தை மிஞ்சும் கம்பீரமான பண்பட்ட நேர்த்தியை அளித்தன. உயர்ந்த சித்தாந்தத்தின் பற்றுதலுக்கு ஆளாகும் போது சிந்தனைகள் மட்டுமின்றி மனிதனின் அனைத்துவித திறமைகளும் பளீரென மின்னும் என்பது இந்நிகழ்ச்சி மூலம் நிரூபணமானது ■

## கலை நிகழ்ச்சிகள்



கலை நிகழ்ச்சி நுழைவாயில்


பாடல், பங்களாதேஷ்



நடனம், ஜார்கண்ட்


நாடகம், கர்நாடாக


போராட்டம் நாடகம், தமிழ்நாடு


மோடி மஸ்தான் நாடகம், தமிழ்நாடு

## பாஜக அரசாங்கத்தின் அந்நிய நேரடி முதலீட்டை . . .

4ம் பக்கத் தொடர்ச்சி

முதலீட்டுத் தாராளமயத்தை அறிமுகப்படுத்திய தையும், மேற்கு வங்காளத்தில் சிபிஐ (எம்) கட்சி ஆட்சிபுரிந்தபோது தொழில்மயம், வளர்ச்சி என்ற பெயரில் இதே அந்நிய நேரடி முதலீட்டுக்குச் சாதகமான கொள்கைகளைக் கடைபிடித்ததை நினைபடுத்திப்பார்ப்பது பொருத்தமாகும். இப்போது, இவர்கள் தேர்தல் நலனுக்காகதான் அதனை எதிர்ப்பதாகப் பாவனை செய்கின்றனர்.

சரியான தலைமையின் கீழ், முழு பலத்துடன் சக்திவாய்ந்த, ஒன்றுபட்ட, உணர்வுபூர்வமிக்க மக்கள் போராட்டத்தை வளர்த்தெடுக்கும் கடமையைக் கையிலெடுத்து, பூர்ஷ்வா அரசாங்கத்தின் இத்தகைய பேரழிவுதரும் கொள்கைகளை முறியடித்திட, பாடுபடும் கோடானகோடி மக்களின் வாழ்வாதா ரத்தைப் பாதுகாத்திட நாட்டு மக்கள் முன்வர வேண்டுமென அறைகூவியழைக்கிறோம் ■

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org